திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

காளிய நர்த்தனர்

மாலை 7] விசுவாவசு ஆவணி– செப்டம்பர் 1965 [மணி 12

சென்னை அரசாங்க அறநிலையப்

7 SEP 1965
MADRAS

சுவாமிமலை, ஸ்ரீ சுவாமிநாதசுவாமி கோயிலுக்குச் சென்னை மாநிலக் கவர்னர் திருமிகு. **ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார்** அவர்கள் வருகை தந்து வழிபடுதல்.

பொருள் அடக்கம்

1. சிவஞான தீபம்
2. மாலைமாற்றுப் பதிகம்
3. கடவுள் உணர்ச்சி
4. மதிப்புரை
5. பாரதப் பண்போவியங்கள்
6. விடை தெரியுமா?
7. விசிஷ்டாத்வைத தரிசன ஸாரம்
8. விடை விளக்கம்
9. சமயப் பொருட் குறிப்புக்கள்
10. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ்
11. தடுத்தாட்கொண்ட தன்மை

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] விசுவாவசு ஆவணி-செப்டம்பர் [மணி 12

சிவஞான தீபம்

முன்னுரை

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு எனப் பொதுவாகக் கூறப்படும். ஆயினும் அப் பதினான்கு சாத்திரங்களைத் தழுவிப் பற்பல சிறு சிறு நூல்கள், அவ்வப்போது பல சான்றோர்களால் இயற்றப் பட்டுள்ளன. அவைகளிற் சைவ சித்தாந்த சாத்திரங்களின் கருத்துக்கள், ஏற்ற பெற்றி சுருக்கியும் விரித்தும் சுவைபெறக் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

அங்ஙனம் சைவ சித்தாந்தச் சார்பு நூல்களாகத் தோன்றியுள்ள சிறு சிறு நூல்கள், சற்றேறத் தாழ ஐந்நூற்றுக்கு மேற்பட்டனவாகும் என, முதன் முதலில் தமிழில் "மொழிநூல்" என ஒரு நூல் எழுதிய அறிஞர் திரு. மாகறல் **கார்த்திகேய முதலியார்** அவர்கள் குறிப்பிடுவர். அத்தகைய சைவ சித்தாந்தச் சார்பு நூல்கள் பலவற்றுள் ஒன்றே **சிவஞான தீபம்** என்னும் ஒரு சிறு நூல் ஆகும்.

இரேவண சித்தர் :

அருட்டிரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்களும் 'சிவஞான தீபம்' என ஒரு நூல் இயற்றியருளினார்கள். அஃது இதனின் வேறாய், உரை நடையில் அமைந்திருப்பதாகும். ஆயின், இதுவோ செய்யுள் வடிவில் **இரேவண சித்தர்** என்பவரால் இயற்றப் பெற்றிருப்பது. இவ்வாசிரியரே **பட்டீச்சுரம், திருவலஞ்சுழி, திருமேற்றளி** ஆகிய சிவதலங்களுக்குத் தல புராணங்களும் பாடியிருக்கின்றார். 'அகராதி நிகண்டு' என ஒரு நூலும் இவராற் பாடப்பெற்றிருக்கின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர், இந் நிகண்டினை அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர்.

சிதம்பர சுவாமிகள் :

இத்தகைய சிறந்த ஆசிரியர் இயற்றியிருப்பதே, "சிவஞான தீபம்" என்னும் இந்நூலின் பெருமையினை விளக்கப் போதியதாகும். எனினும் இந் நூலுக்கு மற்றொரு சிறந்த பெருமையும் உண்டு. திருப்போரூர்ச் **சிதம்பர சுவாமிகள்** அவர்களைப் பற்றி நாம் நன்கு அறிவோம். தமிழறிந்த அறிஞர்கள் அனைவரும் "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" யின் சிறப்பினை யுணர்வர். அதனைப் பாடியருளிய சிறந்த சிவஞானானுபூதிச் செல்வர் ஆகிய சிதம்பர சுவாமிகள், இந் நூலினைப் பெரிதும் மதித்துப் போற்றியிருக்கின்றார்கள்.

கோவைப்பேரூர்ச் சாந்தலிங்கசுவாமிகள் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலைமறுத்தல், அவிரோத உந்தியார் என்னும் நூல்களுக்குத் தாம் வகுத்தருளிய உரைகளில், சிதம்பரசுவாமிகள் சிவஞான தீபச் செய்யுட்கள் பலவற்றை ஆங்காங்கே மேற்கோளாக எடுத்துக் காட்டி யருள்கின்றார்கள். இவ்வாற்றால் சிவஞான தீபம் என்னும் இந் நூலின் சிறப்பினை யாவரும் தெளியலாம்.

நூற்பொருட் கருத்துக்கள் :

இந் நூல் பாயிரம், பொது இயல்பு, உண்மை இயல்பு என்னும் முப்பகுதிகளையுடையதாய், 174 செய்யுட்களால் அமைந்துள்ளது. தீக்கைமுறை சைவ சிலம் திருநீறு யாக்கைநிலை தசவாயுக்கள் ஆதாரயோகம் நவந்தருபேதம் பதிபசு பாச இலக்கணங்கள் தத்துவத்தோற்ற ஒடுக்கங்கள் பஞ்சகலைகள் பஞ்சாக்கர நிலை சீவன்முத்தர்இயல்பு சத்திநிபாதம் சிவபூசைப் பலன் முதலிய பல பொருள்களைக் குறித்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சுவைமிக விளக்கிச் செல்கிறது இந் நூல்!

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்;
இலங்கும்உயிர் உடல்அனைத்தும் ஈசன்
கோயில்..."

எனப் பலரும் பெருக எடுத்துக் கூறும் வரிகள், இந் நூலில் வருவனவே யாகும். இவ்வாறு பல சிறந்த பாடல்கள் இதன் கண் அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டொன்றை மட்டிலும் ஈண்டுக் காண்டல் அமையும்.

(1) சிவ நாமத்தை ஒருமுறை ஓதித் திருநீறு அணிந்தாலே, நம் தீவினைகள் எல்லாம் நீங்கும். கொலைப்பாதகனின் கையில் இருக்கும் கத்தியே யானாலும், பரிசனவேதியைப் பரித்தால் பொன்னாகாமல் இருக்குமோ? ஒரு மரத்தில் பறவைகள் எண்ணற்றனவாகத் திரண்டு அமர்ந்திருப்பினும், ஒரே ஒரு சிறுகல்லை எடுத்து வீசிய அளவில், அவை யனைத்தும் பறந்து ஓடி மறையும் அன்றோ? அதுபோலவே சிவ நாமத்தை ஒரு முறை ஓதித் திருநீறு அணிந்தால், நம் பாவங்கள் நீங்கி ஒழிதல் திண்ணம்.

நிரந்தமன வாக்குடலால் அணைந்த கன்மம்
நீங்குவதெவ் வாறெனவே இயம்பவேண்டா!
பரந்தகொலைப் பாதகன்கைக் கத்தி யேனும்
பரிசனவே தியைப்பரிக்கப் பொன்னா
மாபோல்,
விரிந்தமரத் தமர்ந்தபல பறவை எல்லாம்
விரைந்தொருகல் எறிந்திடவிட் டேகு
மாபோல்
அரன்திருநா மத்தையுரைத் தொருகால்
வெண்ணீறு
அணிந்திடவெவ் வினையனைத்தும்
அகன்று போமே

(2) நமக்கு 10 வயதில் இளம் பருவம் அகன்றுவிடும்; 20 வயதில் உடல்வளர்ச்சி தடைப்படும்; 30 வயதில் அழகு குன்றும்; 40 வயதில் அறிவு தளரும்; 50 வயதில் பலம் குறையும்; 60 வயதில் தாதுவற்றும்; 70 வயதில் கண்பார்வை கெடும்; 80 வயதில் காது கேட்காது; 90 வயதில் வாசனை தெரியாது; 100 வயதில் உயிர் உடலை விட்டு நீங்கிவிடும். ஆதலால் நாம் நம் வாணாளை வீணாளாக்கி விடாமல், நல்ல தவவொழுக்கங்களைக் காலமுள்ள பொழுதே கடைப்பிடிக்கத் தலைப்படுதல் நலம்.

"இட்டமிகும்இளமைநலம் ஈரைந்தாண் டதனில்;
இருபதினில் வளர்ச்சியும்; முப் பதுவருடத்
தழகு;
உட்டகைய மேதையும்நாற் பதுவருடத்து;
உடலில்
ஒண்பலமும் ஐம்பதினில்; அறுபதினில்
தாதும்;
திட்டியும் அங்கு எழுபதினில்; எண்பதினிற்
செவியும்;
திகழ்மணமும் தொண்ணூறில்; சீவனம்
நூறு அளவில்
விட்டகலும்; விரவியுதித் தொடுங்குவதென்
றுணர்ந்தோர்
வினைள்பட் டொழியாமல் விரும்புவர்நற்
றவமே"

3. நாம் சுவாசிக்கும் பிராணவாயு வானது அசைவற்ற சமாதி நிலையில் 12, நடக்கையில் 16, ஓடுகையில் 30, தூங்கு கையில் 40, புணர்ச்சிக் காலத்தில் 64 விரல்களின் அளவு, நீண்டு இயங்கி நிற் கும். இங்ஙனம் பலவகைகளில் நம் சுவாசம் வீணாகி வாழ்நாள் குன்றிப் போகாமல், நாம் பாதுகாத்துக் கொள்ளு தல் வேண்டும். இடைகலை பிங்கலை என்ற இரண்டிலும் சமமாகச் சுவாசம் இயங்குமாறு செய்ய நாம் பயின்று கொண்டால், நமக்குக் குண்டலியோகம் கைகூடி, நலம்பல நல்கும்.

நயந்துசமா தியில்இயங்கும் பன்னிரண்டங் குலிதான் ;
நடந்திடில்ஈ ரெட்டுவிரல் ; உயங்கிவிடும் நவையார்
துயங்கவிரைந்து ஓடிடில்ஐ யாறுவிரல் இயங்கும் ;
துயிலுறில் எண் ஐந்துவிரற் கிடையுடல் விட் டகலும் ;
தயங்கியவேல் விழியாரை முயங்கியிடும் பொழுதில்
தரியாதெண் ணெண்விரலின் அளவுயிர்விட் டியங்கும் ;
பயங்கொளிடை பிங்கலைகள் ஒருவழிப்பட் டிடவே
பரிந்தநற்குண் டலியோகம் பொருந்திடும் அங்குறவே.

(1) இச் செய்யுட் பொருளோடு ஒரு வகையில் இயைபுடைமை பற்றி, பின் வரும் ஒரு சிறந்த புள்ளி விவரக் குறிப் பும், ஈண்டு நாம் அறிந்து கொள்ளத் தக்கது :

"You know while walking, thinking or doing a work a man has to spend his energy..... If we walk without any intention or without anything in our mind, we spend 5 units but if we run to catch a train or bus we may spend 10 units......When a man sees a woman with attraction, he spends 25 units; when he hears her, another 25 units ; when he talks to her, another 25 units ; when he thinks of her, he spends 100 units and any activity will consume 200 units. Even if he thinks and enjoys in the dreams, he spends 400 units. This applies to the opposite sex as well........"

—**Sri G. D. Naidu,** in his Speech delivered at **The Mathematics & Science Association,** The Madura College, Mathurai, on 24-2-53.

4. இறைவன் தன் திருக்கரத்தில் ஏந்தியுள்ள தமருகம் ஆகிய உடுக்கை யினால் உலக உயிர்கட்கு இன்பம் உறும் படி செய்வது **சிருட்டி** ; அபய கரத்தினால் உயிர்களின் இருவினைகளையும் துலைபோல ஒப்பாக்குவது **திதி** ; நெருப்பு ஏந்திய கையினாற் சுழன்றுழலுகின்ற கருவி கரணங்களை யெல்லாம் நீக்கிப் பிறவி யினை அறுப்பது சங்காரம் ; ஊன்றிய வலப்பக்கத்துத் திருவடியினால் உயிர்களை இன்பதுன்ப நுகர்ச்சிகளில் அழுந்து மாறு செய்தல் **திரோபவம்** ; எடுத்த இடப்பக்கத்துத் திருவடியினால் இருள் நிறைந்த கேவல சகல நிலைகளினின்று உயிர்களை எடுத்துச் சுத்த நிலையில் உய்த்து அருளினால் முத்தியடைவிப்பது **அனுக்கிரகம்** ; இவ்வைந்து தொழில்களை யும் புரிவதுதான், இறைவன் பொதுவில் (அம்பலத்தில்) இயற்றும் நடனத்தின் நோக்கமாகும்.

ஊன்றுதம ருகக்கரத்தால் உலகுயிர்கட் கின்பம்
உறுவிக்கும் அதுசிருட்டி ; உகந்துஅபய கரத்தால்
தோன்றும்இரு வினைதுலையொப்பு ஆக்குமது திதியாம் ;
சோதியழல் திருக்கரத்தாற் சுழல்கரணம் அறுத்தே
ஏன்றபவம் அறுப்பது சங் காரம் ; வலப் பதத்தால்
இன்பதுன்பத் தழுத்தல் திரோ பவம் ; எடுத்த பதத்தால்
ஆன்றிருள் கேவல சகலத்து எடுத்தருளால் முத்தி
அளிப்பது அனுக்கிரகம் ; இவை அரன்பொது நாடகமே

5. இரச குளிகையிற் பொன்னும், ஞாயிற்றினொளியிற் கண்ணொளியும், காந்தத்தின்கண் இரும்பும், பெத்தநிலையில் ஆணவமலத்தினுள் உயிரும், விறகினிடத்தில் நெருப்பும், உப்பளத்தில் துரும்பும், விதையின்கண் மரமும் அடங்கிக் கிடத்தல் போலவே, முத்தி நிலையில் ஆன்மாவானது அரன்அருளில் அடங்கி நிற்கும்.

பொன்அதனை அடக்கியிடும் குளிகை போலும்,
பொருவில்விழி யொளியடக்கும் இரவி போலும்,
உன்னும்இரும் பினையடக்கும் காந்தம் போலும்,
உயிரைஅடக் கிடும்மூல மலமே போலும்,
வன்னிதனை அடக்கிடும்இந் தனமே போலும்,
மருவுதுரும்பு அடக்கியிடும் உப்பளமே போலும்,
அன்னபழு மரம்அடக்கும் வித்தே போலும்,
அரன்அருளில் அடங்கும்உயிர் அறிவுதானே

6. ஆன்மாவினிடத்தில் இறைவனின் திருவருட்சத்தி பதிதலைச் **சத்திநிபாதம்** என்பர். இது நான்கு வகைப்படும். அவை முறையே மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்பனவாம். இந் நால்வகைப் பக்குவ நிலைகளும் முறையே வாழைத் தண்டிலும், பச்சை விறகிலும், உலர்ந்த விறகிலும், கரியிலும் நெருப்புப் பிடித்தலைப் போன்ற வேறுபாடுடையனவாகும். மேலும், இறைவன் ஒருவன் உண்டுஎன உணர்ந்து அவனை அடைய விரும்பி முயலும் ஆரம்பநிலை **மந்தம்**; புளியம்பழமும் அதன் ஓடும் போல உடலிற் பற்றற்று நிற்றல் **மந்ததரம்**; உலகினை முற்றும் துறந்து இறைவனை அடைதற் பொருட்டுத் தவவொழுக்கந் தலைப்படுதல் **தீவிரம்**; ஒரு ஞானாசிரியனைப் புகலடைந்து, அவன்றன் திருவடிகளையே பற்றுக் கோடாகக் கொண்டு, அவனுக்கே பணிசெய்து ஒழுகுதல் **தீவிரதரம்**.

திருந்தியசத் திநிபாதம் நால்வகையாம்; மந்தம்
திகழ்மந்த தரம் தீவிரம் தீவிரதரம்;
பரிந்திதனுக்கு உறும்உவமை இருங்கதலிக் குற்றி,
பச்சைவிறகு உலர்விறகு கரியில்எரி பொதிதல்;
புரிந்திவர்பக் குவம் பொருள்உண் டெனஅதற்குப் பொருந்தல்;
புளியந்தோ டும்பழமும் போல்உடற்பற் றறுகை!
அரந்தையுல கினைமுழுதும் துறந்துபொருள் தேடல்;
அருட்குரவன் அடியிணைசேர்ந் தவன்பணிசெய் திடலே

சிவஞான தீபம் என்னும் இந்நூலில் இன்னோரன்ன செய்யுட்கள் பல வருகின்றன. அவற்றுள் இங்கு மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க செய்யுட்கள் இரண்டுள. அவற்றில் சிறந்த சைவ சித்தாந்த நுண்பொருட் கருத்து ஒன்று, நன்கினிது விளக்கப் பெற்றிருக்கின்றது. சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய **உண்மை விளக்கம்** என்னும் நூல், "முத்திநிலையிலும் பதி பசு பாசங்கள் ஆகிய **முப்பொருள்களும்** உண்டு. முத்தியின்கண் இறைவனின் இன்பத்தை அநுபவிப்பது உயிராகிய பசு. பசுக்கள் ஆகிய உயிர்களுக்கு முத்தியின்பத்தை வழங்குபவன் பதியாகிய இறைவன். பாசம் ஆகிய ஆணவமலம் பசுக்களுக்கு முத்தியின்பத்தை விளைவித்து நிற்கும்" என்னும் கருத்து அமைய,

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்!
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல் அணு; —மெத்தவே
இன்பம் கொடுத்தல் இறை; இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா!

எனச் சைவசித்தாந்தச் சுத்தாத்துவித முத்திநிலை பற்றிக் கூறுகின்றது. இக்

கருத்தினைப் பிறநூல்கள் இங்ஙனம் மிகவும் தெளிவுற எடுத்து விளக்கு கின்றில. அதனால் அறிஞர்களிடையே மேற்குறித்த உண்மை விளக்கச் செய்யுள், பெருமயக்கம் விளைவித்து வருகின்றது.*

ஆனால், சிவஞான தீபம் என்னும் இந்நூல் மேற்குறித்த உண்மை விளக்கச் செய்யுளின் பொருளையே, மிகவும் தெளிவுற இரண்டு பாடல்களால் விரித்துரைத்து அழகுற விளக்குகின்றது ;—

(1) முத்தி நிலையிலும்கூட ஆன்மா, ஈசன், ஆணவமலம் என்னும் மூன்று முதற் பொருள்களும் அழியாமல் இருக்கும் என்று ஆகமங்கள் கூறும். அதனைக் கூறுகின்றோம், நீ கேட்பாயாக! நித்தியம் ஆகிய பரபோகத்தினைத் துய்ப்பது **ஆன்மா.** அந்தப் பரபோகத்தினை ஆன்மாக்களுக்கு அளிப்பவன் **ஈசன்.** ஆன்மாக்களுக்கு அப்பரபோகத்தினை மிகவும் விளையும்படி செய்து நிற்பது **ஆணவ மலம்.** இவ்வாற்றால் இம்மூன்று பொருள்களும், அநாதி நித்தியப் பொருள்கள் என்பது பெறப்படும்.

(2) அற்றாயினும், தீங்கையே பயக்கும் இயல்பிற்றாய் எல்லாக் கேடுகளுக்கும் துயரங்களுக்கும் மூலகாரணமாக உள்ள ஆணவமலம், முத்திநிலையில் இன்பத்தை விளைவிக்குமாறு யாங்ஙனம்? துன்பங்களுக்குக் காரணமான மலம் ஒருபோதும் இன்பத்தை விளைவிக்காது என்று நீ கூறுவாயாயின், அதனைக் குறித்து நான் விளக்கியுரைக்கின்றேன் கேட்பாயாக,

ஆணவமலமானது பெத்த நிலையில் திரோதான சத்தியின் வழிநின்று உயிர்களுக்கு உலகத்தைக் காட்டி மாயா போகங்களில் இன்பம் விளையும்படி செய்து, இறைவனை மறைக்கும்; அது போல, முத்திநிலையில் அருட்சத்தியின் வயப்பட்டு நின்று இறைவனைக் காட்டிச் சிவபோகநுகர்ச்சியில் இன்பம் மிகும்படி செய்து, உலகத்தை மறைத்து நிற்கும். இங்ஙனம் மலம் உலகத்தை மறைப்பது, ஆன்மாவின் சிவபோக நுகர்ச்சியின் இன்பத்தை மிகுவிப்பதாகின்றது.

முத்தியினும் மும்முதலும் அழியாது என்றே
மொழிந்திடும் ஆகமம்; அதனை மொழியக் கேள் நீ!
நித்தியமாம் பரபோகம் துய்ப்பது **ஆன்மா;**
நீடுபர போகம் உயிர்க்கு அளிப்போன் **ஈசன்;**
சுத்தமலம் இன்பம்மிக விளைவிக்கும் ஆற்றாற்
சொல்லரிய மும்முதலும் அநாதியாகும்;
வைத்தமலம் முத்தியின்பம் விளையாது என்னின்,
மற்றதுதான் நின்றநிலை வகுப்பக் கேளே!

ஆதிதிரோ தானத்தால் பெத்தந் தன்னில்
ஆணவந்தான் மாயா போகத்தில் இன்பம்
போதமுற விளைத்து, உயிர்கட்கு உலகம் தோன்றப்
புனிதனருள் தோன்றாமல் மறைக்குமாபோல்,
சோதியருள் முத்தியினும் சத்தி மாய்ந்து
சுகானந்தம் விளைத்துயிர்கட் குயிராய் ஈசன்
பேதமற நின்றுணர்த்தும் உண்மை தோன்றப்
பிரபஞ்சம் தோன்றாமல் மறைக்குங்காணே

இவ்வாறு சிவஞானதீபம் கூறும் கருத்து, செவ்வியதாய்ப் பொருத்தமுடையதேயாகும் என்னும் உண்மை,

* "There is rather a **very inconvenient authority** in one of the 14 Siddhanta Shastras, which is apparently in contradiction with this position of Sivagnana Siddhiar. That is a passage in the work called **"Unmai Vilakkam"** which says that the Siva Bhoga by the soul is Caused by the anava mala. Its theory is that all the three entities are eternal even in the Mukthi state.

But this passage is attempted to be explained or explained away by some critics who maintain that what is meant by the passage in question is that the anava, by its absence, produces the experience of Sivanubava. A similarly interpreted stanza in **Tirukural** is cited by the **critic** in support of his interpretation. If we could add a modern illustration of this interpretation, we may say that 'The taxation policy of the Government is responsible for the flourishing of this nascent industry'. This means that the absence of taxation is responsible for the flourishing of this industry and certainly not the act of taxing".

—Thiruvasakamani Sri **K. M. Balasubramanyam,** B.A., B.L., Saiva Siddhanta Lectures, p. 74

"ஆன்மாவால் அறியற்பாலது சிவம் ஒன்றே. அதுவதுவாய் நின்று அநுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும் அறிவுழிச் சிவானுபவ வினைவிற் குறைபடுமாகலின், ஏனையதாகிய உலகத்தை அறிதல் முத்திப் பெரும்பயனுக்கு இடையூறேயாம். ஆதலின் உலகத்தை அறியாமையே முத்திப் பெரும்பயனுக்குச் சிறந்த காரணம் என்று உணர்க. இக் கருத்துப் பற்றியே "இன்பங் கொடுத்தல் இறை. இத்தை விளைவித்தல் மலம்" என்று உண்மை விளக்கம் ஓதிய தென்று தெளிக"

எனச் சிவஞான போதப் பேருரையில் ஆறும் சூத்திரத்தின்கண் ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் குறிப்பிட்டருளி யிருத்தல் கொண்டும்,

"பாசம், பகலோன் முனரே திமிரம்
நாசம் பெறல்போல், நயவா லருள் முன்பு
ஆசங்கை இலாது அழியா தழிவுற்று,
ஈசன் தரும்இன்பு எனநின் றிடுமே"

எனத் தாம் இயற்றியருளிய "பரிபூரணானந்த போதம்" என்னும் நூலின் செய்யுளுரையின் கண்,

"சூரியன் முன்பு இருள்போல இருந்தும் இராததாய் முத்திநிலையில் ஆணவமலம் இருக்கும்... முத்திநிலையில் ஆன்மா அறியற்பாலது சிவம் ஒன்றே; அஃது ஏனையவற்றை அறியாமையே அச் சிவானுபவ இன்பத்திற்குச் சிறந்த காரணம் ஆதலின், 'இத்தை விளைவித்தல் மலம்' என்றார்...... தீ சிவம், சூடு ஆன்மா, கட்டை மலம்; கட்டை தீமயம் ஆதல், ஆணவமலம் இன்பம் விளைவித்தல்..."

என அருட்டிரு பாம்பன் **குமரகுருதாச சுவாமிகள்** உரைவிளக்கம் செய்திருத்தல் கொண்டும் உணரப்படும்.

முடிவுரை :

இத்தகைய சிறப்பின் மிக்க சிவஞான தீபம் போன்ற சமயத் தமிழ் நூல்கள் பலவற்றையும் நயந்து கற்றுப் பயன் பெற்று மகிழ்வது, தமிழார்வமும் சமயவுணர்வும் உடைய தக்கவர்கள் அனைவருக்கும் உரிய சிறந்த கடமையாகும்.

—ஆசிரியர்.

முருகப்பெருமான்
(அகழ்ந்தெடுத்த சிலை)
காயாரோகண ஈசுவரர் கோயில், காஞ்சிபுரம்.

மாலைமாற்றுப் பதிகம்

முன்னுரை

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் பலவற்றுள் மாலைமாற்றுப் பதிகம் என்பதும் ஒன்று. இஃது, ஒருமாலையின் நுனியை மாற்றிப் பிடிப்பதுபோல ஒரு பாடலின் முதல் வரியைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை படித்து அதனையே பின்னர் இறுதியில் இருந்து தொடக்கம் வரையில் மாற்றிப் படிக்க, இரண்டாம் வரியாக அமையும் ஒருவகைச் செய்யுள்! இது போல்வனவற்றை 'மிறைக் கவிகள்' என்பர். **மிறை**—வருத்தம்.

இராபர்ட் பிரவுனிங் என்னும் ஆங்கிலக் கவிஞர், தம்மிடம் வந்து தாம் இயற்றிய கவிதை ஒன்றின் பொருள் குறித்து வினவிய நண்பர் ஒருவர்க்கு, "ஒருகாலத்தில் அப்பாடலின் பொருளை அறிந்தவர்கள் இருவர் இருந்தனர். ஒருவர் கடவுள்; இன்னொருவர் இராபர்ட் பிரவுனிங். ஆனால் இப்பொழுதோ கடவுள் ஒருவருக்குத்தான் அப்பாடலின் பொருள் வெளிச்சம்" ("Once there were two people who knew it, God and Robert Browning; but now God only knows it.") என்று மறுமொழி பகர்ந்ததாக அறிஞர்கள் கூறுவர். அதுபோலப் பாடிய கவிஞர்களே கூட, சில சமயங்களில் தாம் பாடிய பாடலின் பொருளை யுணரவும் கூறவும் முடியாமற் போவது உண்டு.

அம்முறையில், பாடுபவரும் வருத்தப்பட்டு முயன்று அரிதிற் பாட, அதற்குப் பொருள் காண்பவரும் வருத்தப்பட்டு அரிதின் முயற்சி செய்ய வேண்டும்படி அமையும் செய்யுட்களே மிறைக் கவிகள் எனப்படும். இத்தகைய கடினமான பாடல்களை இயற்றுந் திறம், மிகவும் சிறந்த புலமை வித்தகம் உடையவர்களுக்கே இயலுவதாகும்.

கி. பி. 6—7-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்திருந்து காவ்யதர்சம் எழுதிய தண்டியும், கிராதார்ச்சுனீயம் இயற்றிய பாரவியும், சிசுபாலவதம் பாடிய மாககவியும் போன்ற வடமொழிப் புலவர்கள், இன்னோரன்ன சொல்விற்பனம் (verbal leger-demain) மிக்க பாடல்களை இயற்றுதலில் மிக்க ஆர்வம் காட்டி வந்தனர்.

எனவே, **நம்பியாண்டார் நம்பிகள்** கூறுமாறுபோல "ஆறதேறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறதேறும் **தமிழால் வழிகண்டவர்**" ஆகிய திருஞான சம்பந்தப் பெருமான், தாமும் தாம் வாழ்ந்திருந்த காலத்தின் நிலைமைக்கு ஏற்பக் கி. பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில், அங்ஙனம் தமிழிற் சிலவகைப் பதிகங்களைப் பாடியருளினர். அவற்றுள் இம் 'மாலைமாற்றுப் பதிகம்' சிறப்புடையதொன்றாகத் திகழ்கின்றது. மிகக் கடினமும் சிக்கலும் வாய்ந்து பொருள் உணர்தற்கு அரிதாக இருக்கும் பதிகங்களுள் இதுவும் ஒன்று! இதன் பொருளை ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது சுருங்கக் காண்போம்!

—ஆசிரியர்.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணநாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

இதன் பொருள்

யாம்—சிற்றுயிர்கள் ஆகிய நாங்கள்
ஆமா—கடவுள் என்பது பொருந்துமோ?
நீ—நீ ஒருவனுமே கடவுள் என்றல்
ஆம் ஆம்—பொருந்தும், பொருந்தும்;
மா—பெரிய
யாழீ—யாழை ஏந்தியிருப்பவனே!
காமா—அனைவராலும் விரும்பப்படுபவனே!
காண்நாகா—காணத் தகுந்தவாறு பாம்புகளை அணிந்துள்ளவனே!
காணா—காண முடியாதவாறு
காமா—மன்மதனை (அனங்கனாக)ச் செய்தவனே!
காழீயா—சீர்காழிக்குத் தலைவனே!
மாமாயா—பெரிய மாயைகளைச் செய்தலில் வல்லவனே!
மா—கரிய (கொடிய)
மாயா—மாயையினின்றும்
நீ—என்னை நீக்கிக் காத்தருள்வாயாக!

விளக்கக் குறிப்பு

'பிரமமே உயிர், உயிரே பிரமம்' எனத் துணிந்து, யாங்களே கடவுள் என்று கூறுவோரும் உளராகலின் 'யாம் ஆமா? நீ ஆம் ஆம்' என வலியுறுத்திக் கூறியருளினார். "வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே" எனவும், "வருங்கடல் மீள நின்று எம் இறை நல்வீணை வாசிக்குமே" எனவும் தேவாரப் பாடல்களில் வருதலின், இறைவன் யாழ் அல்லது வீணை ஏந்தியுள்ள திறம் உணரப்படும். 'வீணா தட்சிணாமூர்த்தி' என்னும் திருவுருவம் உள்ளமையும் கருதுக. இனி '**யாளி**' என்னும் சொல் 'யாழி' எனத் திரிந்து, விளிவேற்றுமையில் '**யாழீ**' என வந்தது எனினுமாம். யாளி போன்றவனே என்பது அதற்குப் பொருள். காமம்—விருப்பம். காமர்—அழகு. வியத்தகு பல திருவருட் செயல்களைச் செய்தலின் இறைவனை "மாமாயா" என்றார். **மா**—திருமகள், மாயன்—திருமால் எனக் கொண்டு, திருமாலைத் திருவுருவின் ஒரு பகுதியிற் கொண்டுள்ளவனே! எனவும் சிலர் பொருள் கூறுவர். **நீ**—நீக்கு. (1)

யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா

இதன் பொருள்

யாகா—வேள்விப் பயனாக விளங்குபவனே!
யாழீ—யாழ் இசைப்பவனே!
காயா—அருளுருவத் திருமேனிகள் எடுப்பவனே!
காதா—'காதுதல்' ஆகிய அழித்தற் றொழிலைச் செய்பவனே
யார் ஆர்—எத்தகையவர்களுக்கும்
ஆ தாய் ஆயாய்—ஆகின்ற தாய் ஆயினவனே
ஆயா—ஆராய முடியாத
தார் ஆர் ஆயா—ஆத்திப் பூவை மாலையாகக் கொண்டவனே
தாக ஆயா—வேட்கையுற்ற தாருக வனத்து முனிபத்தினியர் ஆகிய கூட்டத்தையுடையவனே!
காழீயா—சீர்காழி இறைவனே
யா—(துன்பங்கள்) எவற்றினின்றும்
கா—எம்மைக் காத்தருள்க.

விளக்கக் குறிப்பு

யாகம்—வேள்வி. காயம்—உடம்பு, திருமேனி. காதுதல்—கொல்லுதல். ஆர்—ஆத்திப்பூ. தார்—மாலை. தாகம்—வேட்கை. ஆயம்—கூட்டம். 'தாக+ஆயா' என்பது 'தாகாயா' என வந்தது. (2)

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா

இதன் பொருள்

தாவா—அழியாத
மூவா—முதுமை அடையாத
தாசா—தசகாரியங்கள் என்பனவற்றால் அடையும் பொருளாக உள்ளவனே
காழிநாதா—சீர்காழிக்குத் தலைவனே
நீ—அஞ்சி நீங்கத் தகுந்த (சுடுகாட்டில்)
யாமா—யாமம் ஆகிய நள்ளிரவில் நடனம் புரிபவனே

மா—பெருமை மிகுந்தவனே

மா மா—மாண்புமிக்க ஐராவணம் என்னும் யானையின்மேல்

யாநீ—ஏறிவருபவனே.

தாந ஆழி—கொடைத் தன்மையிற் கடல் போன்றவனே

சா கா—சாதலினின்று காத்தருள்க.

கா சா—பொன் போன்ற ஒளியை யுடையவனே

தா—எல்லா வரங்களும் தருக

வா—எங்கள் முன்னே வருக.

மூ—எல்லாவற்றுக்கும் முற்பட்டவனே

வாதா—காற்று முதலாகிய ஐம் பூதங்களின் வடிவாய் விளங்குபவனே

விளக்கக் குறிப்பு

தசம்—பத்து. **'தாசா'** என்னும் சொல் அதினின்றும் தோன்றியது தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்பன **தசகாரியங்கள்** எனப் படும். இப் பத்துவகைச் செயல்கள் மூலமாக இறைவன் அடையப் படுவானுதலின் **'தாசா'** என்றார். மாமா—பெருமையுடைய விலங்கு. அஃது இங்கு ஐராவணம் என்னும் யானையைக்குறித்தது. **யாநம்**—ஊர்தி, வாகனம். யாநீ—வாகனத்தையுடையவனே. 'தாநம் + ஆழி' **தாநாழி** எனவந்தது. **காசு**—பொன். மணி. **வாதம்**—காற்று. (3)

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே

மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ

இதன் பொருள்

நீவா—நீங்குதல் இல்லாத

வாயா—மெய்ப் பொருளானவனே

கா—காவுகின்ற

யாழீ—யாழை யுடையவனே

வான் நோ—கொடிதாகிய பிறவித்துன்பம்

வாராமே—எங்களை அடையாமல்

கா வா—வந்து காப்பாற்றுக.

வான் நோவாவா—தேவர்கள் வருந்தாதபடி

மேரா—மேருமலையை வில்லாக ஏந்தியவனே

காழீயா—சீர்காழி இறைவனே

காயா—ஆகாய வடிவினனே

வாவாநீ—நீ விரைந்து வருவாயாக!

விளக்கக் குறிப்பு

நீவுதல்—நீங்குதல். அதனினின்று 'நீவா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சச் சொல் அமைந்தது. வாய்மை—மெய்ம்மை, மெய்ப்பொருள். வாய்மைப்பொருள் ஆகிய இறைவனை ஈண்டு **'வாயா'** என விளித்தார். **கா**—காவுதல், சுமத்தல்; முதனிலைத் தொழிற்பெயர். 'கா யாழ்' என்பது சுமக்கப்படுகின்ற யாழ் எனப் பொருள்தரும். பிறவித் துன்பத்தின் கொடுமை பற்றி **'வான் நோ'** என விதந்தார். **வான்**—தேவர்கள், ஆகுபெயர். மேருமலையை வில்லாக ஏந்தித் திரிபுரம் எரித்தமையினால் இறைவனை **'மேரா'** என்றார். **'காயா'** என்பது ஆகாயா என்பதன் முதற்குறை. (4)

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ

வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா

இதன் பொருள்

யா—எப்பொருள்களுக்கும்

காலா—காலவடிவமாக உள்ளவனே

மேயா—(எல்லாவற்றிலும்) மேவியிருப்பவனே

மேதாவீ—அறிவில் மேம்பாடு மிக்கவனே

தாய் ஆவீ—(எல்லோருக்கும்) தாயாகவும் உயிராகவும் விளங்குபவனே

வீயாதா—எக்காலத்தும் அழிவு இல்லாதவனே

வீதாம் மே—கின்னரம் என்னும் பறவைகள் தாமே இசையில் மயங்கி வந்து விழுமாறு

யாழீ—யாழை மீட்பவனே

யாம்—யாங்கள்

மேல்—மேற்கொண்டு

ஆகு—ஆவனவற்றிற்காக

ஆயா—ஆராய்ந்து வருந்தாதபடி

கா—காத்தருள்க.

விளக்கக் குறிப்பு

'**யா**' என்னும் வினாப் பெயர் ஈண்டு எஞ்சாமைக் குறிப்பின் வந்து, எல்லாப் பொருள்களையும் உணர்த்திற்று. '**காலன்**' ஈண்டு இயமனைக் குறிக்காமல் காலதத்துவத்தை இயக்கி நிற்கும் இறைவனை யுணர்த்திற்று. 'மேவியவா' என்பது '**மேவா**' என மருவி வந்தது. 'மேதாவி' என்பது விளிப்பொருளில் நீண்டது. இறைவன் அனைத்துயிர்களுக்கும் தாயாகவும் ஆவியாகவும் விளங்கி வருதலின், '**தாயாவீ**' என்றார். 'வீதாமே யாழீ' என்றது, இறைவன் மீட்டியருளும் யாழின் இசையைக் கேட்டு, கின்னரம் அசுணம் முதலிய பறவைகள் தாமே வந்து கூடி இன்னிசை கேட்டு உருகி மயங்கி மகிழும் திறம் உணர்த்தியவாறு. **வீ** - பறவைகள், **மே** - மேவுகின்ற.

—தொடரும்.

ஆணையர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்.

(ஆகஸ்ட், 1965.)

9—8—1965	...	மணலி தமிழ்க் கல்லூரி, கனம் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படுதல்.
11—8—1965	....	தென்காசி, ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் சொற்பொழிவுகளின் போது தலைமை வகித்தல்
12—8—1965	...	திருச்சுழியல்—ஸ்ரீ திருமேனிநாதசுவாமி ஆலயம்—"துணைமாலையம்மன் பிள்ளைத் தமிழ்"—புத்தகம் வெளியிடுதல்.
15—8—1965	...	சென்மலி—ஆளவந்தார் நாயகர் தருமங்கள்—ஸ்தாபகரின் ஞாபகார்த்தக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்.
14—8—1965	...	சென்னை அயன்புரம் கமல விநாயகர் கோயிலில், கந்தபுராணச் சொற்பொழிவுத் தொடக்கம்.
22—8—1965	...	மதுராந்தகம் செங்குந்தர் பேட்டை ஸ்ரீ அருளாழி ஈசுவரர் கோயிலில், உழவாரத் தொண்டர் படைத் தொடக்கம்.

குறிப்பு : இடமின்மையால் ஒரு சில கட்டுரைகளை இவ்விதழில் வெளியிட இயலவில்லை. அவைகள் அடுத்த இதழில் வெளிவரும்.

—ஆசிரியர்.

கடவுள் உணர்ச்சி

முன்னுரை :

மனிதனுக்கு எத்தனையோ பல வகையான உணர்ச்சிகள் உண்டு. அவைகளுள் கடவுள் உணர்ச்சியும் ஒன்று. நம்மையும் அறியாமல் நமக்குள்ளே அஃது அமைந்து கிடக்கின்றது. கடவுள் இல்லை என்று சாதித்து வாதிப்பவனுக்கும் உள்ளே கூட, அவ்வுணர்ச்சி அமைந்து கிடக்கத்தான் செய்கின்றது. ஆனால், அஃது அவன்பால் எதிர்மறை முறையில் (Perverted way) செயற்படுகின்றது. கடவுளை இகழ்பவர்களும் கூட, தாங்கள் பின்பற்றும் தலைவர்களைக் கடவுளைப் போலவே பாவித்து, ஒருவகையில் வழிபாடு (Hero-worship) செய்து வருதலைக் காண்கின்றோம். 'ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தம்மின் வேறல்ல; இரண்டும் ஒன்றே' என்னும் கொள்கையினையுடைய **ஆதிசங்கரர்** தாமும், மனித குலம் உய்ந்து ஈடேறுதற்குக் கடவுள் உணர்ச்சியும் வழிபாடும் இன்றியமையாதன என்று கண்டு, தாமே அவற்றைக் கடைப்பிடித்து உலகுக்கு வழிகாட்டியருளினார் (1).

நம்மைவிட அறிவிலோ ஆற்றலிலோ-செல்வத்திலோ பதவியிலோ — சிறந்துயர்ந்து திகழ்பவர்களைக் காணுங்கால் எல்லாம், இயல்பாகவே நமக்கு ஒருவகை வியப்பும், உவப்பும், அச்சமும், அடக்கமும் ஏற்படுகின்றன. அவர்களைத் தொழுது வணங்கி, அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற முயலுவது, பொதுவான நல்ல மனித இயல்பாகவே யாண்டும் காணப் படுகின்றது. இவ்வியல்பின் வளர்ச்சியும் சிறப்பும் மிக்க நிலையே கடவுள் உணர்ச்சி எனலாம்! நாம் நம்முடைய பலவகைக் குறைகளையும் சிறுமைகளையும் உணரத் தலைப்படுகின்றபோது நம்மிலும் மேலான உயர்ந்த பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய பரம்பொருள் ஒன்று உண்டு என்று உணரப் பெறுகின்றோம்! அத் தெளிந்த மனநிலையினைத்தான் கடவுளுணர்ச்சி என்று குறிப்பிடுகின்றோம்!

தாயுமானவர் :

மனித வாழ்வில் சிலசில உணர்ச்சிகள், நம்மிடையே சிலகாலம் வரையில் மறைந்து கிடந்து, பின்னர் வெளிப்பட்டு வளர்ந்து செயற்படுகின்றன. உதாரணமாக, 'பால் உணர்ச்சி' (sex-instinct) என்பதனைக் குறிப்பிடலாம். ஒரு குறிப்பிட்ட வயதில், பருவத்தில் அஃது ஏற்பட்டே தீர்கின்றது. குழந்தைமை நிலைமையிலும் இளம் பிள்ளைமை வயதிலும், பால் உணர்ச்சி பெரிதும் தோன்றுவதில்லை. அப்போது அதனை நாம் இழிவாகவும் அருவருப்பாகவும் கூட நினைக்கின்றோம். ஆனால் காளைப் பருவம் அடையுங்கால், நம் மனப்பான்மை மாறுகின்றது. பாலுணர்ச்சியின் ஆற்றலை நாம் பாங்குற உணரப் பெறுகின்றோம். நாம் விரும்பினாலும் வெறுத்தாலும், உடன்பட்டாலும் மறுத்தாலும், எப்படியேனும் பாலுணர்ச்சி நம்மிடை அரும்பியே விடுகின்றது!

---

(1) What is most curious is that a philosopher, such as **Sankara** the most decided monist, and the upholder of Brahman, as a neuter, as the cause of all things, is reported to have been **a worshipper of idols** and to have seen in them, despite all their hideousness, symbols of the Deity, useful, as he thought, for the ignorant, even though they have no eyes as yet to see what is hidden behind the idols, and what was the true meaning of them".

—Max Muller.

அதுபோலவே, ஒரு குறிப்பிட்ட சமயத்தில், ஏதேனும் ஒரு சூழ்நிலையில், நம் மனிதவாழ்வில் எங்ஙனமேனும் நமக்குக் கடவுள் உணர்ச்சி தோன்றி விடுகின்றது. முதலில் நாம் கடவுளுணர்ச்சியின் அருமை பெருமைகளையும், அநுபவங்களையும் அவசியத்தினையும் உணராமல் இருந்த போதிலும், பின்னர் உணரவேண்டியவர்கள் ஆகிவிடுகின்றோம். அப்பொழுதுதான் நம்முடைய முன்னைய அறியாமையும் பிழையும் விளங்குகின்றன. நமது பேதைமை நிலையினை அறிந்துகொண்டு, பின்னர் நாமே நாணமுற்று வருந்துகின்றோம். இதனையே,

கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பென்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில் ;
கணவன் அருள் பெறின்முனே சொன்ன வா
றென்னெனக்
கருதி நகை ஆவள் ; அது போற்
சொன்னபடி கேட்கும் இந்தப் பேதைக்கு
நின்கருணை தோற்றிற் சுகாரம்பம் ஆம்...

எனத் **தாயுமான சுவாமிகள்** அழகுறக் குறிப்பிட்டருளி யிருத்தல் காணலாம்.

திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசரும் இத்தகைய தொரு செய்தியினையே, தம்முடையஅநுபவமாகக் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர் தம் இளமைப் பருவத்திற் சிலகாலம் சமண சமயம் சார்ந்திருந்தார். கடவுளில்லை என்றும் அவர் கட்டுரைத்து வந்தார் போலும்! 'ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே' என்று அவரே கூறி இரங்குமாறு போல, இறைவனைப் பழித்துப் பேசிக் காலத்தைக் கழித்து வந்தார். அவருக்கும் வாழ்க்கையில் ஏதோ ஒரு குறித்த சூழ்நிலை எய்தியது ; பக்குவம் வந்தது. அவர் அறிவும் தெளிவும் அடைந்தார். கடவுளுணர்ச்சி பெற்றார். கடவுளைத் தேடி எங்கெங்கோ அலைந்தார். எங்கும் உள்ள கடவுள் தம் உள்ளத்திநுள்ளே இருப்பதனைக் கண்டு உணர்ந்தார். கடவுள் நம் உள்ளத்திலேயே எழுந்தருளி வீற்றிருக்கவும், அவர் இல்லை என்று பிறழ நினைத்துக் கொண்டு, இதுகாறும் அவரைப் புறங்கூறி இகழ்ந்து வந்தோமே! நம் இகழ்வுரைகளை யெல்லாம், இறைவன் நமக்குள்ளே நம்மோடு ஒன்றி உடனிருந்து இதுவரையிற் கேட்டுக்கொண்டு அன்றோ இருந்திருக்கிறார்! நாம் எத்தகைய தவறு செய்தோம் என்று நினைந்து கழிவிரக்கம் கொள்கின்றார்!

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன் !
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் ! வெள்கி நானும்
விலாஇறச் சிரித்திட் டேனே !

உடலமைப்பும் கடவுளுணர்ச்சியும் :

கடவுளுணர்ச்சி பெறுவதற்கு நாம் வேறுபிற சாதனங்களோ சான்றுகளோ தேட வேண்டுவதில்லை. நம்முடைய உடம்பின் அமைப்பினை ஒரு சிறிது உன்னிப் பார்த்து உணர்ந்தாலும் கூட, நமக்குக் கடவுளுணர்ச்சி ஏற்படுதல் திண்ணம்.

நமது மனித உடம்பில் 600 தசை நார்கள், 1000 மைல் நீள முள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப் பையில் தேன்கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள், 3×10^{12} நரம்புச் செல்கள், 300 லட்சம் வெள்ளை யணுக்கள், 18×10^{13} சிவப்பணுக்கள். $2\frac{1}{2}$ லட்சம் தலைமயிர்கள் ஆகியவை உள்ளன. 70 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடி தடவைகள் துடிக்கின்றது. 5,00,000 டன் இரத்தத்தை வெளியேற்றி உடம்பிற் பரவச் செய்கிறது. நாள்தோறும் 36

அவுன்ஸ் அளவு உமிழ் நீர் சுரந்து விழுங்கப் படுகின்றது. 120 முதல் 240 அவுன்ஸ் வரை வயிற்றிற் செறிநீர் ஊறி உணவைச் செறிப்பித்துக் கிருமிகளைக் கொல்லுகின்றது (2).

இதுபோன்ற எத்துணையோ பல வியத்தகு செயல்களை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, நாம் கடவுள் உணர்ச்சி அடையப் பெறுதல் திண்ணம்.

எமர்சன் :

"கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒருசிறிது உன்னிப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட **இயற்கைச் சட்டம்** ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் எல்லாம் நடப்பதுபோலக் கருதிக் கொண்டு, நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள், ஒருவகையில் தேவையில்லாதனவும் பயனற்றனவுமே யாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில் தான், நாம் வன்மை யுடையவர்களாகின்றோம். செருக்கற்ற **பணிவுடைமையினால்** தான், நமக்குத் தெய்வீகநிலை கிடைக்கின்றது. **நம்பிக்கையும் அன்புமே**, நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற் சிறந்த உடன்பிறப்பாளர்களே! **கடவுள் இருக்கின்றார்!**

இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப்பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மை இயக்கி நிற்கின்றது. உலக அமைப்பை நாம் ஏதும் பிறழச் செய்து விடாதபடி அதுதான் கவனித்துக் கொள்ளுகின்றது. உலகப் பொருள்களிலெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும் பொழுது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றோம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்த முற்படும்போது, அது நம் கைகளைப் பிணித்து விடுகின்றது; அல்லது நம்மையே தாக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள் அமைப்புகள், செயல்கள் யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, **நம்பிக்கை** கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன (3)" என்று **ரால்ப் வால்டோ எமர்சன்** என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர் கூறுவதும், ஈண்டு அறிதற்கு உரியது.

தமிழ்ச் சான்றோர்கள் :

கடவுளுணர்ச்சி யுடையவர்களாக விளங்குதல், ஒரு சிறந்த பண்பு. பெரியவர்கள் எல்லோரும் அதனைச் சிறந்த

---

(2) "There are in the human body 600 muscles, 1000 miles of blood vessels, 550 arteries, 16 square feet of skin, 1½ million sweat glands, 700 million cells in honeycomb fashion in the lungs, 3×10^{12} nerve cells, 30 million white corpuscles, 18×10^{13} red corpuscles and 2,50,000 hairs on the head. In 70 years, the heart beats 2500 million times and lifts 5,00,000 tons of blood. 3 pints of saliva are swallowed daily and the stomach generates 5 to 10 quarts of gastric juice daily which digests the food and destroys the germs..." — Louis Leguen.

(3) "A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events; that our painful labours are very unnecessary and altogether fruitless; that only in our easy, simple, spontaneous action are we strong, and by contenting ourselves with **obedience** we become **divine.** Belief and love will relieve us of a vast load of care. O! my brothers! **God exists.**

There is a soul at the centre of nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we prosper when we accept its advice; and when we struggle to wound its creatures, our hands are glued to our sides, or they beat our own breasts. **The whole course of things goes to teach us faith.**

—Ralph Waldo Emerson.

குணங்களுள் ஒன்று என மதித்துள்ளனர். "குலன் அருள் **தெய்வங்கொள்கை** கலை **பயில்** தெளிவு கட்டுரை வன்மை" என்னும் நூற்பாவில், கடவுளுணர்ச்சி ஆகிய தெய்வங் கொள்கையும் ஓர் இன்றியமையாத சிறந்த பண்பாக வற்புறுத்தப்பெற்றிருத்தல் காணலாம்.

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்"

எனத் திருவள்ளுவரும், நாத்திகர்களைச் சுட்டிக் கூறியுள்ளார்.

திருமுருகாற்றுப்படையில் ஆசிரியர் நக்கீரர் கடவுளுணர்ச்சி யில்லாதவர்களை "**முரணுநர்**" (243) எனக் குறிப்பிட்டு இழித்துரைக்கின்றார்! புறநானூற்றுச் செய்யுள் (29) ஒன்றில், புண்ணிய பாவங்கள் இல்லை என்று அறிந்துச் சொல்லும் கொடிய தீயவர்களுடன் நீ எஞ்ஞான்றும் சேராதே! என்னும் கருத்தில்,

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர் !

என உறையூர் **முதுகண்ணன் சாத்தனார்** என்னும் புலவர் பெருமான், **சோழன்நலங்கிள்ளி** என்னும் அரசனுக்கு அறிவுரை கூறிப் பாடியருள்கின்றார் !

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் 'போற்றித் திருவகவல்' என்னும் சிறந்த பகுதியில்,

"ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"

எனக் கூறி வருந்துகின்றார்.

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே!
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்;
தடைஒன் றின்றியே தன்அடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே!

எனத் திருநாவுக்கரசர் நமக்குச் சிறந்த எச்சரிக்கை செய்தருள்கின்றார். காரண காரிய வாதங்களைக் கொண்டு, உங்கள் அறிவினால் கடவுளை நீங்கள் சோதித்து அறிய முற்படாதீர்கள். நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு மனம்பற்றி வாழ்மின்கள்! அதனால் உங்களுடைய மாபெரும் துக்கங்களெல்லாம் மாய்ந்து நீங்கியொழியப் பெறுவீர்கள்! என்று ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள் சோதி!
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்!
சாதுக்கள் மிக்கீர்! இறையே வந்து சார்மின்களே!
—திருப்பாசுரம்.

காந்தியடிகள் :

"உலகம் எங்கணும் ஓர் ஒழுங்குமுறை நிலவுகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும், வாழ்கின்ற ஒவ்வோர் உயிரையும், மாற்ற முடியாத ஆற்றல்மிக்க ஒரு பெருஞ் சட்டம் ஆட்சி புரிந்து வருகின்றது அஃது ஒரு குருட்டியற் சட்டம் அன்று. ஏனெனில், குருட்டியற் சட்டமாயின், உயிரும் அறிவும் உடைய பொருள்களின் இயக்கத்தை வரையறை செய்து நடத்த. அதனால் இயலாது. எனவே, வாழ்வனைத்தையும் ஒரு வரையறை செய்து நடத்துவிக்கும் அந்தச் சட்டம்தான், **கடவுள்**. சட்டமும், சட்டத்தை வகுப்பவனும் ஒன்றே. நாம் அறிந்து கொள்ளாமை காரணமாகச் சட்டத்தினையோ, அதனை வகுத்தவனையோ இல்லை என்று சொல்லுவது பொருந்தாது. உலகில் நிலவும் அரசு நெறியினை அறியாமையினாலோ, இல்லை என்று சொல்லுவதனாலோ, நமக்கு ஏதும் பயன் விளையாது. அதுபோலவே நாம் கடவுளை இல்லை என்பதனால், நமக்கு அவர்தம் சட்டங்களினின்று விடுதலை ஏற்பட்டு விடாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதனால் நம் வாழ்க்கை தொல்லைகள் இன்றி எளியதும் இனியதுமாக அமையும். அங்ஙனமே கடவுளின் இயற்கைச் சட்ட திட்ட நெறிமுறைகளுக்கும் நாம் கட்டுப்பட்டு ஒழுகினால், நம்முடைய வாழ்க்கைப்

மதிப்புரை

[நல்லன எல்லாம் போற்றும் நலஞ் சிறந்த நமது அறநிலைய ஆணையர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபடி, இனி இப்புதிய பகுதியும் நம் 'திருக்கோயில்' இதழில் தொடர்ந்து வெளிவரும். —ஆசிரியர்.]

"பார்த்தனை வளர்த்த பாட்டன்": முத்தமிழ் வள்ளல், செஞ்சொற் கொண்டல், முதுபெரும் புலவர் திரு. **புரிசை. சு. முருகேச முதலியார்** அவர்களைத் தமிழுலகமும் சமயவுலகமும் மிகப்பல ஆண்டுகளாக நன்கறியும். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக, அவர்தம் அரிய சொற்பொழிவுகள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நிகழ்ந்து, பல்லாயிரவர்களுக்குப் பயன்பட்டிருக்கின்றன. சிறந்த அறப்பெருஞ் செயல்கள் பலப்பல ஆற்றிய பெருமையும் அவர்க்கு உண்டு. சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில், அதன் 30-ஆவது சைவர் மாநாட்டுப் பெருவிழாவினை, 1935-ஆம் ஆண்டில் **அருட்டிரு. விபுலானந்த அடிகளார்** அவர்கள் தலைமையில், திருவண்ணாமலையில் தம்முடைய தனிப் பொறுப்பில் பெரும் பொருட் செலவில் நடத்தியுதவிய மாட்சிமை, இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. பாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற சமயத் தமிழ் நூல்களில், நுணுகி ஆழ்ந்த பெரும் புலமை கைவந்தவர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல் வன்மையில் தன் நிகர் அற்றவர். வெற்றுச் சொல் சற்றும், அவர்தம் விரிவுரைகளில் விரவா. பாமரர்க்கே யன்றிப் பண்டிதருக்கும் பெருஞ் சுவையும் பயனும் விளைக்கும் வகையில், அவர்தம் அரிய பெரிய விரிவுரைகள் அமைந்து திகழும். கடல் கடந்த **இலங்கை, மலேயா** ஆகிய நாடுகளிலும்கூட அவர்தம் சொற்பொழிவுகள் நிகழ்ந்து, பல்லாயிரவரைப் பரவசப் படுத்தியுள்ளன. சுருங்கச் சொல்லின், இந்நூற்றாண்டின் தலைசிறந்த தமிழறிஞர் பெருமக்களின் வரிசையில், முன்னணியிற் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர்களுள், நம் முதுபெரும் புலவர் அவர்களும் ஒருவராவர்.

கடவுள் உணர்ச்சி

—566-ம் பக்கம் தொடர்ச்சி

பயணம் எளிமையும் இன்பமும் நிறைந்த தாக அமைந்து விடும் (4) எனக் **காந்தியடிகள்** அறிவுறுத்துகின்றார்!

முடிவுரை ;

இங்ஙனமே சான்றோர்கள் எல்லோரும் ஒருமுகமாகக் கட்டுரைத்து வற்புறுத்தி அறிவுறுத்தி யருளுதலைக் காண்கின்றோம். ஆதலின் நாம் அனைவரும் கடவுளுணர்ச்சி யுடையவர்களாகத் தூய வாழ்க்கை வாழ்ந்து நலம்பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

(4) "There is orderliness in the universe; there is an unalterable Law governing everything and every being that exists or lives. It is not a blind law; for no blind law can govern the conduct of living beings.

That Law, then, which governs all life is God. Law and the Law-Giver are one. I may not deny the Law or the Law-Giver because I know so little about It or Him.

Just as my denial or ignorance of the existence of an earthly power avail me nothing, even so my denial of God and His law will not liberate me from its operation; whereas humble aud mute acceptance of divine authority makes life's journey easier even as the acceptance of earthly rule makes life under it easier".

—Mahatma Gandhiji.

'பீஷ்மாசாரியர்' என்ற ஒரு பொருளைத் தலைக்கீடாகக் கொண்டு, எத்துணையோ பல நுண்பொருள்கள் இந்நூலில் விளக்கப்படுகின்றன. எளிய இனிய சிறந்த நடையில், **அகவற்பாவில்** இந்நூல் யாக்கப் பெற்றுள்ளது. ஆசிரியரின் கலையியலுணர்வும், உலகியல் அநுபவமும், பழுத்து முதிர்ந்த புலமை நலனும், செழித்துயர்ந்த சிந்தனைத் திறனும், இந்நூல் முழுவதும் ஒளிவிட்டு இலங்குகின்றன. தெய்வம்—தெய்வச் சிறப்பு—உருவ வழிபாடு—முன்னோர் முயற்சி—நம் சோம்பல் வாழ்க்கை—குடிமையின் கொற்றம்—கல்லா அநுபவம்—கல்வியொடு அநுபவம்—அன்பின் பிறப்பிடம்—பொறுமையின் வரவு—மக்கள் மன வளர்ச்சி—மாணவரில் மாண்பினர்—கலைத் தேர்வு—பெண்ணையும் பெண்ணும் முதலிய தலைப்புக்களில், சிறந்த கருத்துக்கள் பல சிந்தனைக்கு விருந்தாக விளக்கப்பட்டுள்ளன. **ஒட்டுமாம் பழம்** (51), **கருணைக் கிழங்கு** (70), **தாமரை மலர்** (83) என்பனவற்றின் இயல்புகளை உவமையாகக் காட்டி வளக்கியிருக்கும் நுண்பொருட் கருத்துக்கள், ஆசிரியரின் இயற்கைப் பொருளுணர்வையும், நுண்மாண் நுழைபுலஞ் சான்ற ஆராய்ச்சித்திறனையும் புலப்படுத்துவன ஆகும். ஒருசில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு :—

(1) முதல்கொடு செய்யும் முயற்சிகள் முற்றும்.
முதலிடை ஐயம் உறின், பயன் உண்டோ?

(முதல்—மூலதனம், முயற்சி - தொழில், முதலிடை - கடவுளிடத்தில்.)

(2) மாலையே போலும்ஓர் நூலைநாம் செய்வது!
மலர்களே மாலையில் மன்னும் கருத்தெலாம்.
உயர்கருத் துகள்பல ஒருங்குற உதவிசெய்
நல்ல கதைகளே நார்எனக் கூறலாம்.

(3) 'இயற்கை' என்பதென்? இறையொடு கலத்தலே!

(4) சமைந்ததை நன்குறச் சமையம் என்றனர்.

(5) மோட்சம் உறுவதற் கேயல மூதுரை
நாட்டிடை வாழவும் நல்வழி காட்டிடும்.

(6) கோயில் இலாதஊர் குடியிருப்பு அகலுவர்; இன்றோ
சினிமா இலாதஊர் சேரலம் என்பர்!
திரைப்படம் திரைப்படம் திரைப்படம் எங்குமே
பரம்பொருள் போலப் பாரெலாம் நிறைந்தது!
எப்படி ஆடிடின் எடுபடும் ஆட்டம்
அப்படி ஆடுவ தேஅவர் நாட்டம்.

(7) ஏனோ இப்படி மக்கள் மனோநிலை
நீரலை போன்றே நிலைகுலை கின்றது?

(8) பாடுபட் டுழைத்தவன் பாட்டன் ஆவான்.

(9) கம்பம் நடத்திடின் கட்டிடம் என்னும்?
கம்பித்து நிற்றலாற் கம்பமென் றுரர்அதை.

(10) கதைஎலாம் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்தன.

(11) காவியம் உலகிற்கு ஆவியே யன்றோ?

(12) வார்த்தையில் அன்றிநாம் வடிவிலும் பொய்த்தோம்!

(13) உலகமே ஒருகுடி! ஒருகுடி உலகமே!

(14) வாதியின் அழுகையில் வக்கீல் அழுகையே
நீதி யையும்பழு தாக்கிட நேரும்.

(15) இளமையில் வேண்டும் முதுமையின் எண்ணம்!

(16) எவ்வளவு உலகியல் இன்பம் மறந்தான்
அவ்வளவு அவன்கலை ஆய்விற் சிறந்தான்!

(17) தெள்ளி யுணர்ந்திடு செல்வர் எதிர்தான்
உள்ளில் இருந்துஉயர் பொருள்கள் கிளம்பும்!
தெளிவறு மக்களின் முன்னரிற் சேர்ந்தால்
எளிதுறு பொருள்களும் உள்ளில் ஒடுங்கும்!
ஆயிரம் தருகினும் அறிவிலர் கூட்டம்
அதைவிரும் பாதுஉயர் அறிவினர் நாட்டம்!

(சொற்பொழிவு அநுபவம்)

(18) பாரத நாட்டின் பழம்பெருங் கதைகளில்
உலகறி உயர்வுடைத்து இரண்டே யாகும்;
இராமா யணம், பாரதம்என இவற்றைச்
சொல்வதன் முன்னமே சொல்லுவர் அனைவரும்!

(19) ஆசா ரங்கள் உலகிடை ஆயிரம்
அதில்அதி லும்ஒரு உண்மை இருக்கும்
எதுஎது நல்லதோ எடுத்துக் கொள்ளலாம்!

(20) உருவ உவமையாய்த் தினையையும் பனையையும்
உன்னுது அதைப் பண்பு உவமையாய் உன்னின்
இன்னும் பலகருத்து இதனிடை எழுதரும்!

(21) மனந்தனை ஆள்வோன் மனிதன் ஆகின்றான்.

(22) ஆரார் அன்றெனை நல்லவன் ஆக்கினர்
அவரவர் உருவெலாம் ஆண்டவன் உருவமே

(குருபக்தி, நன்றியுணர்வு)

என்பன போன்று நூலின் இடையிடையே போதரும் பொருள்பொதிந்த விழுமிய மணிமொழிகள், **தாலிபுலாக நயம்** பற்றி நூலின் சிறப்பினைச் சால்புற உணர்த்தும். விரிவு அஞ்சி, ஈண்டு அவை மேலும் எடுத்துக்காட்டப் பெற்றில. சிறந்த இனிய இக் கவிதை நூலை, அன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் கொள்வார்களாக! **விலை ரூபா:** 2-50

கிடைக்குமிடம்: 19, குமரன் கோயில் தெரு,

திருவண்ணாமலை, வடஆற்காடு.

கவிதை அஞ்சலி

["பார்த்தனை வளர்த்த பாட்டன்" என்னும் நூலைப் பெற்றுப் படித்து மகிழ்ந்து அதனை இயற்றியருளிய நம் முதுபெரும் புலவர் அவர்களுக்கு, அன்பும் பணிவும் பாராட்டும் தெரிவித்து எழுதிய கவிதைக்கடிதம், நூலின் சிறப்பையும் நூலாசிரியரின் பெருமையையும் விளக்குதல் பற்றி இங்குத் தரப் பெறுகின்றது. —ஆசிரியர்.]

புரிசை முருகேசர் என்றெவரும் போற்றும்
குரிசில்! உயர்செஞ்சொற் கொண்டால்!—வரிசையினில்
நும்மனையோர் சொற்பொழிவை **நுண்ணி**திற்பல் காற்கேட்டே
மெய்ம்மை அறி வுற்றேன் மிக. (1)

பேரன்பு மிக்க பெருந்தகைமை நற்சான்றீர்!
நீரன்பு கொண்டு நினைந்தளித்த — தோரின்ப
நன்னூலைப் பெற்றேன்! நலம்நுகர்ந்தேன்! இன்புற்றேன்!
என்னே? புகழ்ந்துரைப்பேன் யான்! (2)

'**பார்த்தனைத் தான்வளர்த்த பாட்டன்**' என்னும் செம்பொருள் நூல்
ஓர்த்துணர்ந்து கற்றேன்! உளம்களித்தேன்!—சீர்த்தபல
எத்தனையோ நுண்பொருள்கள் இன்பமையத் தேற்றியுள்ளீர்!
அத்தனையும் போற்றியுய்தற் காம்! (3)

எளிய இனிய எழில்நடையில், மக்கள்
தெளிதக்க உண்மையெலாம் தேற்றும்!—அளிமிகுத்து
அன்புஅறி வாற்றல் அனுபவங்கள் தாம்முதிர
நன்கியற்றும் நும்நூல் நயந்து. (4)

செழிக்கும் உயர்புலமைச் செம்மால்! நீர் நன்கு
பழுத்துயர்ந்த செந்தமிழ்ப் பாவால்,—மொழிக்குமொழி
இன்சுவைத்தேன் ஊற்றாய் இனிதியற்றும் சீர்ப்பனுவல்,
மன்சுவைத்தேன் நன்றே மகிழ்ந்து. (5)

சீலமிகு நற்பெரும! செந்தமிழ்ச்செஞ் சொற்கொண்டால்!
சாலநல்ல இன்கவிதைத் தன்மைதிகழ்—நூலாக
மற்றும்இது போல்நூல்கள் மாண்பின் வகுத்தளித்துப்
பொற்புறநீர் வாழ்க! பொலிந்து. (6)

சிறந்த தொருபொருளைத் தேர்ந்தெடுத்துப் பாடல்
சிறந்த கவிஞன் சிறப்பாம்!—திறம்தெரிந்து
வாலி வழக்கைப் பொருளா வரித்த செயல்,
சாலமிகப் போற்றத் தகும். (7)

சேண்திசையும் போற்றும்உயர் செந்தமிழ்ச்சை வத்தோன்றல்!
மாண்புயர் **வாலி வழக்கு** எனும்நூல்,—காண்பதற்கு
எல்லையிலாப் பேராவல் யான்மிகவும் கொண்டுள்ளேன்! (8)
ஒல்லை முடிப்பீர்! உவந்து.

—ஆசிரியர்.

பாரதப் பண்போவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

வியாசர் (3)

துருபதன் ஐயந்தீர்க்கத் தோன்றிய வேதவியாசர் அம்மன்னவனை நோக்கிச் சிலவகுத்துரைத்தார். துருபதா! உனது மகள் முற்பிறப்பில் மறைக்கல்விய முனிவனை மணந்துவைகிய நளாயினி. அம்மாதவன் இவள் கற்பின் திறத்தையறியப் பல துன்பங்களைத் தந்து ஆய்ந்தனன். இச்செல்வி யெதற்கும் பின்னிடையாது கணவனைப் பேணினள். அவன் முடிவில் உனக்கு வேண்டுவது யாதென வினவினான். எப்பிறப்பினும் நின்னைப் பிரியாது வைகும் நிலை வேண்டுமென வேண்டினாள். அம்மாதவனும் அங்ஙனமே அருளினான். பின்பிவர் மலையும் ஆறும் மரமுங் கொடியும் போன்ற பல்வேறு வடிவங்கள் கொண்டு கூடிவாழ்ந்தனர். பின்னர் அந்த மறைக்கல்வியன் ஒருவனே தனது தவத்திறத்தால் இந்தப் பாண்டவர் ஐவருமாகத் தோன்றி நிற்கின்றான். ஆதலால் இவ்வைவருக்கும் இவள்மேல் காதலுண்டாகக் காரணமிருந்தது. ஆயினும் தங்கள் எண்ணம் ஒரு பெண்ணைக் காதலித்து உலக நெறிக்கு மாறாகத் தடுமாறுவதேன் எனத்தோன்றாது ஐயமுற்றார்கள். இவ்வையந் தீரவழியின்றி ஐவரும் உளங் கலங்கினார்கள். அவர்கள் தாம் தங்கியிருந்த இடத்தையடைந்தவுடன் தாயே இன்று எங்களுக்கொரு ஐயம் எய்திற்று. இதற்கு என்ன செய்வது என ஒருசேர வினவினார்கள். உள்ளிருந்த அன்னை இவர்களது ஐயம் என்ற சொல்லுக்குப் பிச்சைப்பொருள் எனக் கருதிக்கொண்டாள். பாண்டவர் வேத்திரகீயத்தில் புகுந்தபோது பிச்சையேற்றுண்டு சில நாள் இருக்க நேர்ந்தது. இவர்கள் பண்புணர்ந்த அந்தணச் செல்வரொருவரால் பெருமையுற்றுப் பிறங்கியது வேத்திரகீய வாழ்க்கையில் பிற்பகுதியில் தான். வேத்திரகீய அந்தணர்கள் அகத்திற்கெல்லாம் அருவிருந்தாகிவைகிய எங்களுக்குப் பாஞ்சாலம் புகுந்த பிறகும் பழையபடிப் பிச்சைப் புகவேண்டிவந்ததேயெனப் பேதுறுகிறார்கள் தம் மக்கள் என எண்ணினாள் அவர்கள் அன்னையாகிய குந்தி. அவள் கிடைத்ததைத் தேவாமுதமாகக் கருதி நீங்கள் ஐவரும் அருந்துங்கள் என்று கூறிக்கொண்டே வெளியில் வந்தனள். வந்தவள் திருமணச் செல்வியைக் கண்டு தியங்கினாள். அவள் நான் என்ன நினைத்தேன். என்ன சொல்லிவிட்டேன். என்ன எனது அறியாமை. மாணவ வாழ்க்கையில் ஆசாரமுள்ள இடங்களில் ஐயமேற்றுண்டும் கலைநலம் பெறுவது குற்றமன்றென்ற குறிப்பில் வேத்திரகீயத்தில் முகமறியாத நாளில் ஒழுகிய முறையன்றோ இந்தப் புதிய நகரம் புகுந்த இந்நாளிலும் ஏற்பட்டதென எண்ணினேன். மக்கள் மன்றல் விழாவிற்குச் சென்று திரும்பினரென்றதை மனங்கொளவில்லையே யென்றெல்லாம் மறுகினாள் குந்தி. அறன் மகனான அண்ணல் அன்னையை இறைஞ்சி நினது சொல்லே எங்களுக்கு நன்னெறி. எங்கள் மனத்தில் உண்டான ஒரு கலக்கத்திற்குத் தீர்வுகாணவே உங்களை வினவினோம்., நீங்கள் ஏதோ நினைத்தீர்கள். ஏதோ உரைத்தீர்கள். ஆனால், உங்கள் களங்கமற்ற ஒருசொல் எங்கள் களங்கத்தை ஒருவாறு நீக்கவல்லதாயிற்று. ஆனால், ஒரு கன்னியிடத்தில் முறை தவறாத உளப்பாங்குள்ள எங்களைவருக்கும் காதல் உண்டாகக் காரணமென்னவென்பது பின்னர்தான் விளங்கவேண்டும் என்று தங்கள் உள்ளக்கிடக்கையை வெளியிட்டனன் தருமன்.

இந்த வில்வளைப்பில் வெற்றிபெற்றுக் குலாலனார் இல்லடைந்த நிகழ்ச்சியைப் பலபடிப் பேசுகிறார்கள். அங்குச்சென்று அருச்சுனன் ஒருவனும் அம்மா இன்று ஒரு கனி கிடைத்தது. இதனை என்ன செய்

வுது என வினவினுன் என்று சிலர், அவசரத்தில் இடையெழுத்துக் குறைந்து கன்னியைக் கனியென்னவே அவள் ஐவரும் அருந்துங்கள் என்றனளாம். ஐயம் என்ற சொல்லே வெளிப்படையாகவே பிச்சை கிடைத்ததென்றுரைத்தான் பார்த்தன் என்பார் சிலர். இப்படியெல்லாம் பேசுவதுண்டு. ஆனுல், வில்லியார் இவற்றிற்கெல்லாம் இடமளிக்கவில்லை. அவர் கவியை உன்னினுல் மேல்கண்டவழியே வருகின்றது.

“ அன்றிலக் கெய்தகோவும் துணைவருமான வெம்போர்
வென்றுகொற் றவையோ டொக்கும்மின் னிடைப் பொன்னுந்தாமும்
சென்று மட்கலஞ்செய் கம்மி செழுமனை முன்றில் எய்தி
இன்றுபெற்றனம் ஓரையம் என்செய்வது இதனை யென்றுர்”.

எனவருகிறது. இதில் அருச்சுனன் மாத்திரம் இப்படிக் கேட்டனன் எனக் கூறுவதற்கு ஏதுவில்லையே. இப்பாடல் முழுதும் பன்மையாகப் பாண்டவர் ஐவரையும் சுட்டிக்கொண்டே வருகின்றதே. ஒருமையில் யாரையும் உரைக்கவில்லையே. “அன்றிலக்கெய்த கோவும் துணைவரும் சென்று இன்று பெற்றனம் ஓரையம் என்செய்வதிதனை யென்றுர்” எனவருகின்றதால், கன்னிகைமாட்டு ஐவருக்கும் காதல் உண்டாயிற்று. அதனை ஒருவருக்கொருவர் அறிந்துகொண்டார்கள். சிறிதும் தீநெறிச் செல்லர்த இவர்கள் ஐவர் மனமும் கலக்கமுற்றது. கலக்கந்தீரப் பெரியவரை நாடினுர்கள். தங்களைப் பெற்றெடுத்த பெரியவளையணுகிப் பேதுற்ற ஐவரும் விரைந்து தங்கள் மனமறுக்கத்தை வெளிப்படுத்தித் தீர்வுவேண்டினுர்கள். ஐவர் வாயிலும் ஒருசேர எங்கள் ஐயத்தை யென்னசெய்வது என்ற சொல்லே எழுந்தது. இவர்கள் கொண்டபொருளே அவளும் கொண்டிருந்தால் அவளுக்கும் இந்தத் தியக்கம்தான் வந்திருக்கும். அவள், பேரூர்புக்கும் பிச்சைப்புக நேர்ந்துளதேயெனக் கலக்கமுற்று இப்படிக் கழறுகிறுர்கள் எனக்கருதினுள். துன்பகாலத்தில் தங்கள் இன்னுரைகளினுல் இளைஞரைத் தேற்றுதல் பெரியவர் கடமையாதலால், மக்காள் பேதுறவேண்டாம். இது இன்று நமக்குக் கிடைத்த தெய்வத் திருவருளென்றே யெண்ணுங்கள், ஒருசேர அருந்துங்கள், தாழ்வில்லை. வாழ்வுவருங்கால் அது தானேவரும், எனக்கூறிக் கொண்டே வெளிவந்தாள். கன்னியைக் கண்டு கரும்பென விரும்பினுள். ஆனுல் தனது அவசர உரையைக் குறித்துக் கலங்கினுள். வஞ்சகமறியாத நெஞ்சகமுள்ள தங்கள் அன்னை ஏதோ நினைத்து ஏதோ உரைக்க அது தங்கள் ஐவர் கருத்தையுங் கண்டவளுரை போன்று ஒத்திருக்கத் தாம் நினைத்ததும் தாயுரைத்ததும் சரி. இம்மறச்செயல் அறச்செயலாக ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும். அது வெளிப்படுங்கால் அறிதும் எனவெண்ணிய தருமன் அவளை நோக்கி, அன்னையே நீங்கள் வருந்த வேண்டாம். இது உங்கள் நினைவு மட்டுமல்ல, எங்கள் நெஞ்சிலும் ஏனே இந்த நினைவுண்டாகின்றது, என்றனன். எனக் கவி எழில்பட இயம்புகிறது.

“என்னினைந் தென்செய்தேன்மற்று என்சொன்னேன் என்று சோரும்—அன்னையை நோக்கி நின்சொல் ஆரணப் படியது ஆமால் — நின்நினைவு அன்றுல் எங்கள் நெஞ்சினும் நினைவுண்டு என்றுன்—தன்நிகர் இலாதகேள்வி சான்றசீர்த் தருமன் என்பான்” என வருகிறது. இது அடாத செயல்என அவசரமுற்றுவிடாதிருக்கத் தாயுரையை மேற்கொண்ட தருமன்:ஒருமடவோனல்லன், அன்றிக்கற்றவன் அவ்வழிநிற்றலிலாதவன் என்னவும் இசையாது, மிகச் சான்றுண்மையாளன் ஆதலால் இதற்கானதொரு தனி இயல் ஏதோ இருக்கவேண்டும். அது எல்லோர்க்கும் எளிதில் விளங்குவதாகவும் இருக்க முடியாது. தருமனே தயக்கமுறுகின்றனனெனில் இது அவனுக்கும் மேம்பட்ட அறிவுடையவர்களாலன்றி விளங்கத்தக்கதல்ல. என்ற இத்தனையும் தோன்ற “நாங்கள் ஐவரும் வேட்டும் என்றுன் அறத்தின் மைந்தன்” அவன் தன்னிகரிலாத கேள்வி சான்றவன், கீர்த்தியாளன், அசைவற்ற பண்பாளன் என்றெல்லாம் நனிவிளங்க வற்புறுத்துகிறது கவி. பிறிதொருமுறை

காணலாம். "தன்னிகரிலாத கேள்வி சான்றசீர்த் தருமன் என்பான்". இத்தனையும் இதற்கு ஏதுவாக முற்பிறப்பில் முற்றிய செயல்களையும் உரைத்து மன்னவன் மனத்தைத் தேற்றினர் "நிருபனின் உளத்தில் ஐயம் நீக்குக நீக்குகவென்று அன்றுதுருபதன் முன்னர்வந்து தோன்றிய" வேதவியாசர்.

வேதவியாசர் துருபதனைத் தெளிவுறுத்திய செயலை, வியாதன்மொழி ஒரு பெரு வெள்ளமாம் அதில் மூழ்கித் தனது நெஞ்சம் மயலகலக் குளித்துவிட்டனனெனும், இப்படியழகுற மொழிகின்றார் வில்லியார்." "ஓதாது உணர்ந்து மறைநாலும் உருவுசெய்த வேதாவும் ஒவ்வா வியாசன் மொழி வெள்ள நீரால்—கோதான நெஞ்சைக் குளிப்பாட்டினன் கோடி கோடி—தோதான வண்டு துதைமாலைகொள் சோமகேசன்"

வேள்வியில் வியாசர்

இந்திரப்பிரத்தமா நகரில் இராசசூய யாகத்தில் தருமராசனுக்கு ஒரு ஐயம் வந்தது. வேள்வியின் முடிவில் அந்தணர்களுக்கெல்லாம் சிறப்புச் செய்தாயிற்று. அரசர்களில் யாருக்கு முதல் சிறப்புச் செய்வது என்பது தருமநந்தனனுக்குத் தோன்றவில்லை. அவன், தனது பாட்டனாராகிய வீடுமரை நோக்கி யாருக்கு அக்ர தாம்பூலம் கொடுக்கலாம் எனக் கேட்டனன். வீடுமனர், அங்கு வந்திருந்த முனிவர்களையெல்லாம் பொதுப்பட நோக்கி எங்கள் தருமன் வினவிற்கு நானே விடையளித்துக்கொள்வதா? உலகத்து அரசர்களின் சிறப்புக்களையெல்லாம் நன்குணர் பெரியராம் நீங்கள் சொல்லுங்கள் என வேண்டினன். ஆயிரம் ஆயிரமாக அங்குக் கூடியிருந்த முனிபுங்கவர்களில் வியாசரே எழுந்தார். அவர், 'காரின்மாமேனிக்கரிய செங்கிரிக் கண்ணனுக் குதவெனக் கதித்தார்"

இப்படிக் காரொத்த நிறமும் சக்கரமேந்தும் கரமும் கொண்ட கண்ணபிரானுக்கு அக்ரதாம்பூலம் தருவீர்களென வியாசர் உரைத்தபொழுது அவ்வயகத்துள்ள யாவரும் சாலப் பொருத்தமேயெனக் கூறி மகிழ்ந்திருந்தனர். ஆனல், சேதிநாட்டரசனை சிசுபாலனெருவனும் அடல்கொண்டு மறுப்பாரையினன். இந்நிகழ்ச்சியை உருப்படுத்திக் காட்டுகின்றார் வில்லிபுத்தூரார். அவரது களிற்று நடையொத்த கவி ஒரு பெரும் போர்க்களத்தையே நமது கண்களின் முன் வருவித்துக் காட்டுவதுபோலிருக்கிறது.

"என்றபோ தந்த வேத்தவை யிருந்தோர் யாவரும் இருந்துழி யிருந்து—நன்றுநான் மறையோர் சிகாமணி யுரைத்த நவிரறு நல்லுரை யென்றார்—சென்ற போர் தொறும் வென்றியே புனையும் சேதிப பதிசிசுபாலன்—கன்றினன் இதயம் கருகினன் வதனம் கனலெனச் சினந்தனன் கண்ணும்"

இப்படி உளங்கன்றி முகங்கறுத்துக் கண்கள் சிவந்து ஆர்த்தெழுந்த சிசுபாலன்,

"பூபால ரவையத்து முற்பூசை பெறுவார் புறங்காரில்வாழ்—கோபால ரோவென்றுருத்தங் கதிர்த்துக் கொதித்தோதினன்—காபாலி முனியாத வெங்காமன் நிகரென்னக்கவின் எய்தியேழ்—தீபாலடங்காத புகழ்வீர கயமென்ன சிசுபாலனே"

சிசுபாலன் மேலும் குலப்பெருமைகளைச் சுட்டிக் கூறுகின்றான். "சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்ப்பாவகப்—பேரன் குலத்தோர் முதலோர் இருந்தார்கள் பெயர்பெற்ற பேர்—வீரங்கொலோ? வாகு சாரங்கொலோ? செல்வம் மிச்சங்கொலோ? பூரம்பு ராசிப் புவிக்கென்றும் முதுவோர்கள் பொதுவோர் கொலோ?"

சிசுபாலன், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலத்திலும் கடைப்பொருளாகிய உப்பையும் கடற்கரைநிலம் கழிபட, நிற்பன மூன்று நிலம். சிறப்புடைய பொருள்களைத்தரும்

இம்மூன்றிலும் குறிஞ்சி மிக மேட்டுநிலம். மருதம் மிகப்பள்ளத் தமைந்தது. இவற்றிற்கு இடைப்பட்ட உயரத்தில் அமைந்த நிலமாதலால் இரண்டிற்கும் பொதுவாகின்றது. தங்கள் மாடு ஆடுகளுக்கு மேய்விடமான அந்தக் காட்டு நிலத்தில் வாழும் மக்களுக்கு இடையர்கள், பொதுவர்கள் என இட்டு வழங்கும் பெயர்கள் இடத்தால் வந்த பெயர்களாகும். அதைவிட்டு அப் பொதுவர்கள் என்ற பெயரையே யெதற்கும் பொருந்துமெனக் கொண்டு மதி, ரவி, கனல், குலமன்னவர்க்கெல்லாம் பொதுவானவர் அக்காட்டில் வாழும் பொதுவர்கள் எனப் பொருள்கொண்டு கற்றுவல்ல வியாசன் இப்படி ஒரு பொதுவனுக்கு அக்ரதாம்பூலங்கொடுக்கக் கூறினனோவென உரைத்தனனும் சிசுபாலன். "பூரம்புராசிப் புவிக்கென்றும் முதுவோர்கள் பொதுவோர் கொலோ" என்ற வில்லியின் இன்னுரையெப்படி நிலவளத்தை அளந்துகாட்டுகிறது?

சிசுபாலன் வியாசரையும் கண்ணனையும் சேர்த்துப் பழிப்புரை பகர்ந்தான். அவன் ஏ! பராசரன் மதலையே! ஒரு இந்திரசாலக்காரனுக்கா முதற்சிறப்புச் செய்வது? மிக்க் குற்றமற்றஉரை உனது உரையென யெள்ளினன்.

"பராசர முனிவன் மதலை ஆம்படியே பகர்ந்தனை பழுதிலா மாற்றம்—இராசமண்டலத்தில் மரபினுல் வலியால் ஏற்றமும் தோற்றமும் படைத்தோன்—சுராசுரர் வியக்கும் கஞ்சனை மலைவான் சூரன் மாமகன்வயிற் றுதித்தோன் — தராதல மிசையே பிறந்து இவன் கற்றது எத்தனை யிந்திர சாலம்"

சிசுபாலன், சுகன் தந்தையே! நீகண்ட முதல்வனுக்குள்ள சிறப்பு யாருக்குண்டு? இவன் பிறப்பதற்கு முன்னமே அன்னையுந் தந்தையும்அருஞ்சிறை வைகவந்த அருளாளன். தனது பிறப்பின் சிறப்பிற்காகத் தனக்கு முன்பிறந்த அறுவரை அழிவுறச் செய்யக் காரணனான அரும்பிறப்பாளன். இவன் தனக்குமுன் பிறந்தவனுக்கு இரு தாயர்மகனெனச் செய்வித்த எழிலாளன் என்றெல்லாம் ஏசினன்.

(பலராமன் தேவகிவயிற்றில் கருவாகத் தங்கிக் கண்ணன் மாயையால் ரோகணி வயிற்றில் சேர்ந்து பிறந்த தனிப்பிறப்பாளன் என்ற சிறந்த வரலாறுண்டு.) இக்கருத்துக்கள், "அன்னையுந் தாதைதானும் அருஞ்சிறை யகத்துவைக—முன்னிரு மூவர் முன்னோர் தங்களை முருக்குவித்தான்—பின்னொரு தமயன் தன்னைப் பெற்றதாயிருவரென்றென்—றின்னலஞ் சொல்லவைத்தான் இவனைவேறயாவரோப் பார்" என்ற பாடலால் இயம்பப்படுகின்றன. இப்படி ஒரு நூற்றிற்கும் மிகுதியான கொடுஞ் சொற்களைக் கூறிக்கொண்டு எதிர்த்தனன் சிசுபாலன். கண்ணன் அவ்வுரைகளைக் கணக்கிட்டு அவனைச் சக்கரமோச்சி முடிவித்தனன். அருள்மூர்த்தியின் சக்கரத்தால் முடிவுறும்சேதிநாட்டுச்செல்வன் ஒரு சோதிவடிவாக வந்து கண்ணன் கழலிணைகளில் கலந்தனன். இது என்ன எதிர்த்தவன் அழித்தொழித்த செம்மலின் அடியிணைகளில் கலக்கநின்ற அதிசயம் எனக் கண்டு நின்றோரெலாம் வியந்தனர். நுண்ணறிவுள்ள பெரியோர்கள், சிசுபாலன் உரைகளெல்லாம் அவனுடைய தெழித்த ஓசையாலும் கொடுந்தோற்றத்தாலும் வசைமொழிகள் போலத் தோன்றின. ஆனால், அவனது வீரஉரைகளின் உட்பொருள்களெல்லாம் அன்பர்கள் உருகியுருகிப் பாடும் இசையுரைகளின் கருத்துக்கள் நிறைந்தனவே யன்றி வேறில்லை. முடிவும் நாம் ஐயுற்றபடி யிணக்கமான முடிவாகவே ஆயிற்று, பிணக்கத் தோற்றமெல்லாம் ஒரு விளையாடல்போல ஆயிற்றேயிது என்கொல் என ஐயுற்றனர். உண்மை கண்டு உரைப்பவர் யார்? வியாசர்தான். அன்றிருந்த அவையகத்தார் ஐயந்தீர யாதுந் தெரிந்துதெளிந்த நமது முனிபுங்கவர் சில உண்மைகளை உரைத்தனர்.

அவர், ஒருகால் தூர்வாசமுனிவர் வைகுண்டபதியின் காட்சிக்குச் சென்றனர். வாயிலில் நின்ற காவலர் இருவரும் உள்நுழைய இது சமயமல்லவெனத் தடுத்தனர், மாமுனிவர் அவர்களை நீங்கள்

பண்ணுலகத்தில் சென்று பிறப்பீர்க ளெனச் சபித்தனர். திருமால் முன்னின்று அவர்களுக்கு இரக்கங்காட்ட வேண்டு தலும், இவர்கள் வன்பராகின் முப்பிறப்பும், அன்பராகின் எழுபிறப்பும் அடைந்து மீள்வார்கள் என அருள் செய்தார் மாதவர். அதுகேட்ட காவலர், "மற்றவர் இறைவன் மலரடி வணங்கி வான்பிறப் பேழுற மாட்டோர்—முற்றும் முப்பவமும் உனக்குவெம் பகையாய் உற்பவித்து உன்பதம் உறுவேம். வெற்றிகொள் முதிர் போர் நேமியாய் என்றார். விமலனுங் கொடியவெஞ் சாபம்—அற்றிடும் வகையவ்வரம் அவர்க்களித்தான் அசுரராய் அவரும்வந் துதித்தார்"

அவர்கள், இரணியன் இரணியாக்கன், இராவணன் கும்பகருணன், கம்சன் சிசுபாலன், என முப்பிறவிகளிலும் வந்தார்கள். இப்பிறவியே அவர்கள் சாபவீடு பேறடையவந்தபிறவி. கம்சன் கண்ண பிரானுக்கு அம்மான். சிசுபாலன் அத்தை மகன். இவன்தாய், இவனதுகுற்றங்கள் ஒவ்வொருநாளும் நூறு நூருகவந்தாலும் மன்னிக்கவரங்கேட்டிருந்தாள். இன்று, சிசுபாலன் நூற்றிற்கும் மேற்பட்டவசையுரைகளை வாரிவீசினான். இதுவரை இவ்வளவு பேசாதிருக்கச் செய்ததும், இன்றிப்படிப்பேசிமுடிய வழிவகுத்ததும் இந்தத் தேவதேவனது திருவருள்தான். கண்ணபிரான், தனது சிறந்த அன்பர்களாகிய பஞ்ச பாண்டவர்களின் இச்சிறந்த பெருவேள்வி ஒருபரமபத வரலாற்றோடு முடியவேண்டுமென எண்ணியிருந்தனன்போலும். தருமனும் இப் பரமபத வாழ்க்கை தனக்குக் கிடைத்ததாகவே எண்ணினான். சிசுபாலனும் பாண்டவரும் தங்கை தமக்கைகளின் மக்கள். என்ற உண்மைகளை வெளிப்படுத்தி யாவர் உள்ளத்தையும் உருகச்செய்தார் வேத வியாசர்.

"வீடுமன் விதுரன் துரோணனே முதலாம் விரகிலாவுயர்வுடை வேந்தர்-நாடினர் மனத்தில் புளகமுற்றுடலம் நயன நீர்மல்க நாக்குழறிப்பாடினர் புகழ்ந்து பரவினர் பரவிப் பைந்துழாய் கமழ் மலர்ப் பாதம்-சூடினர் சுருதிக் கெட்டொணு தொளிரும் சுடர்மணித்துய்ய சோதியையே". புராதன புண்ணிய வரலாறுகளில் மனம்வைக்கும் பெருமக்கள் பொறுமையும் அன்பும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். கண்ணனுக்குப் பகைவர்களாக வருபவர்களையெல்லாம் தமக்கும் பகைவர்களாக எண்ணிக்கொண்டு பாரதம் பாகவதம் கேட்பதும், இராமனுக்குப் பகையாகவரும் இராவணாதியரைத் தமக்குப் பகைவராகவும் இழிந்தவராகவும் கருதிக்கொண்டு அவன்பாவி யிவன்பாவி யென்று அவசரமுற்றுப் பேசவுங்கூடாது: இந்த நல்லபண்பு இதுபோன்ற இடங்களையெல்லாம் உள்ளத்தில் ஊன்றி உன்னும்பொழுதுதான் உண்டாகும். எப்படி யெதிர்த்தான் சிசுபாலன், எப்படியானுன்? அவசரமுற்று இவனை இழிந்தவன் கொடியவன் என்று பேசிவிடலாமா? இவனைவிடவா நாமெல்லாம் திருமாலுக்கு அன்பர்கள்? இராவணனும் இப்படித்தான். முதல்நாள் போரில் முழுதுந்தோற்று வெறுங்கையோடு நடந்துச்சென்று கட்டிலிற்சாய்ந்தான் இராவணன். அவனது மூதாதையாகிய மாலியவான், அருகிற் சென்று அணைத்துப் பிடித்து, இன்றைய போர் எப்படி முடிந்தது என வினவினான். அந்த மாலியவானுக்கு உளங்குளிர உரைக்கின்றான் இனிய தனித்த இரகசிய இடத்திலுள்ள இராவணன். "வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாள் அங்கை-ஈசன் என்று இனைய தன்மை எளிவரும் இவரால் அன்றி-நாசம்வந்து உற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்-பூசல் வண்டு அரற்றும் தாராய். இது இன்று புகுந்தது என்றான்". இப்படி யிசைக்கின்றார் கம்பர், இராவணனது உரையாக.

இங்கு அயன் அரி அரன் மூவருக்கும் தராத சிறப்பைத் தன்முன்னின்று தன்னைப் பரிபவப்படுத்தி ஒருநாளெல்லாம் உடற்றி உடற்றி ஓய்வித்த இராமனுக்கு அளிக்கின்றான் இராவணன். என்றால், அவனைவிட இராமனுக்கு இனியவராகக் கருத நமக்கென்ன உரிமையிருக்கிறது? இரணியனோ இராவணனோ சிசுபாலனோ கயவர்களல்ல நயவர்கள். ஆறோடும் பக்கத்தில் துரும்போடுகிறது,

ஆற்றோட்டத்தை எதிர்த்து மீனோடுகிறது. வெள்ளத்தின் அருமையும் பெருமையும் மீனுக்குத் தெரிவதைவிடத் துரும்புக்குத் தெரியுமென்பதா பொருள். அதுபோல அப்பெருவீரர்களெல்லாம் தெய்வத் திருவருட்கடலில் ஆழமறிந்தவர்கள். அவ்வருளன்றித் தமக்கு நிலையும் உயிரும் வேறில்லை யென்ற முடிவுகண்டவர்கள். நீரைத் தவிர நிலையும் உயிரும் வேறில்லை யெனவறிந்த மீன் நீரையெதிர்க்கவும் உடன்படும். ஆனால் ஒரு இமைப்பொழுதும் நீரைவிடாது. அதுபோலவே உடன்பட்டும் எதிர்த்தும் ஆண்டவனோடு உறவாடுகிறார்கள் மிகுந்த உரமுள்ள அன்பர்கள். அவர்களை இழிக்கவும் பழிக்கவும் நாமார்? நாமொரு ஆற்றோடு ஓடும் துரும்பென அடங்கும் மனப்பான்மை அருள் நூலில் ஈடுபடும் அன்பர்களுக் கெல்லாமமையவேண்டும்.

இங்கு சிசுபாலன் எதிர்ப்புரைகள் எத்தனை? அவற்றையெல்லாம் எண்ணியவர் இருவர். ஒன்றிரண்டென்று எண்ணியவன் கண்ணன், உள்பொருளையெண்ணியுருகியவர் வியாசர். அதனால்தான் கதித்து எதிர்த்துக் கனைத்துக் கடுகடுத்துப் பேசிய சிசுபாலன் பேச்சில் சினமொன்றுமின்றி நினைவூன்றி முடிவுகாண விழைந்து நின்றனர் வியாசர்.

—தொடரும்.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

" திருக்கோயில் " இதழின் சந்தாதாரர்கள் அனைவரும் 1965-1966-ஆம் ஆண்டுக்கான சந்தாத் தொகையை **30-9-1965** க்குள் செலுத்தித் தத்தம் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம். முகவரி மாறியிருந்தால், சந்தாதாரர்கள் தம்முடைய புதிய முகவரியினை விவரமாகத் தெரிவித்தல், இதழ்கள் தவறிவிடாமற் சேர்வதற்குத் துணைபுரியும்.

—ஆசிரியர்.

கோயில் நிகழ்ச்சிகள்

மன்னார்குடி :	சொக்கநாத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் (8-9-65)
சென்னை அயன்புரம் :	ஸ்ரீ கமலவிநாயகர் கோயில், கந்தபுராணச் சொற்பொழிவு.
வேலூர் வெட்டுவாணம் :	இரேணுகாம்பாள் கோயில், பிரம்மோற்சவம்.
சென்னை திருமயிலை :	கபாலீசுவரர் கோயில் திருமுறை விழா (11-8-65 முதல் 22-8-65 வரை).
திருச்செந்தூர் :	சுப்பிரமணிய சுவாமி கோயில், ஆவணிப் பெருந் திருவிழா (17-8-65 முதல் 28-8-65 வரை).
தேரழுந்தூர் :	வேதபுரீசுவரர் கோயில், ஸ்ரீ ஞானசம்பந்த விநாயகர் சதுர்த்தி உற்சவம்.

விடை தெரியுமா?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையாளர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் வரும் வினாக்கள், கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்துகொண்டு மகிழ்வதும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் "சிறு துளி பெருவெள்ளம்" என்னும் நிலையிலும், "எனைத்தானும் நல்லவை தேர்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்ற முறையிலும், சமயத் துறையிற் பொதுவாகப் பலதுறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்து கொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன்படுமாறு அமைவதற்கு, இறையருள் துணை புரிவதாக! — ஆசிரியர்]

1. 'பகவத் விஷயம்' என்று எவற்றிற்குப் பெயர்? ஏன்?
2. 'இளையாழ்வார்' என்று யாருக்குப் பெயர்? அவருக்கு வேறு பெயர்கள் என்னென்ன?
3. சீர்காழியைப் போலவே, பன்னிரண்டு பெயர்களையுடைய மற்றொரு பெரிய தலம் யாது?
4. பாடல் பெற்ற சிவ தலங்களுள் முன்பு இருந்த பழைய இடத்தினின்று மாறி இடம் பெயர்ந்து அமைந்துள்ள மூன்று தலங்களைக் குறிப்பிடுக.
5. செம்பியன்மாதேவி என்பவர் யார்? அவர் செய்துள்ள கோயில் திருப்பணிகள் யாவை?
6. 'நடு நாடு' என்று எதற்குப் பெயர்? ஏன்? அதற்கு மற்றொரு பெயர் யாது? அந் நாட்டின் சிறப்பு என்ன?
7. 'திருக்களிற்றுப்படியார்' என்பவர் யார்? அல்லது யாது? பெயர்க் காரணத்தை விளக்குக.
8. 'சூதன் ஒலிமாலை' என்று திருஞானசம்பந்தர் எவற்றைக் கூறுகின்றார்? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. ஸ்ரீரங்கத்தில் உள்ள ஏழு திருவீதிகளின் பெயர்கள் என்னென்ன?
10. பாடியவர் யார்?

(1) 'பாம்பின்வாய்த் தேரை போலப்
பலபல நினைக்கின்றேன்'

(2) 'செத்த போதில் ஆருமில்லை
சிந்தையுள் வைம்மின்கள்'

(3) 'ஒன்றும் நீ அல்லை அன்றிஒன் றில்லை
யார்உனை அறியகிற் பாரே?'

(4) 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து

மாழை மான்மட நோக்கியுன் தோழி,
உம்பி எம்பிஎன் றொழிந்திலை.....'

(5) 'கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி ஓடும் மனம்' (விடை: 585-ஆம் பக்கம் பார்க்க.)

விசிஷ்டாத்வைத தரிசன ஸாரம்

மஹா வித்வான் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரிய ஸ்வாமி, ஸ்ரீகாஞ்சீ.

முன்னுரை:

"வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி" என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே உலகில் பலபல மதங்கள் தோன்றியிருந்தாலும் அவை வைதிக மதமென்றும் அவைதிக மதமென்றும் பொதுவாக இருவகுப்பாகும். வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளும் மதம் வைதிக மதம். வேதத்தைப் புறக்கணித்து ஸ்வதந்திரமாகத் தோன்றிய மதம் அவைதிக மதம். அவைதிக மதங்களிற் காட்டிலும் வைதிக மதம் சிறந்ததென்னுமிடத்தை நாம் விவரிக்க வேணுமோ? வைதிக மதங்களுள் பரமபவித்திரமான விசிஷ்டாத்வைத தரிசனம் மிகச் சிறந்து விளங்குகின்றது. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போது "உளன் சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" என்கிற பாசுரத்தினால் 'தாம் போதிக்கும் பரமபுருஷன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் விளங்குபவன்' என்றருளிச் செய்கையாலே இக்கலியுகத்தில் அவ்வாழ்வார் தொடக்கமாகப் பரவியுள்ள விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயம் பரமவைதிகமென்னத் தட்டில்லை. ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தரிசனத்தில் சீர்மைபெற்று விளங்குவன.

2. "ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல் வாழி, தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி—ஏழ்பாரு முய்ய அவர்களுரைத்தவைகள் தாம்வாழி, செய்ய மறை தன்னுடனே சேர்ந்து" என்னுமுபதேசரத்தினமாலைப் பாசுரத்தில் ப்ரமாணங்களும் ப்ரமாதாக்களும் ப்ரமேயங்களும் ஸாரமாகத் தெரிவிக்கப்பட்டமை காண்க. வடமொழி, தென்மொழி வேதங்களாகிற உபய வேதங்களும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகளும் நமக்கு ப்ரமாணம். யதார்த்தஜ்ஞான நிதிகளான ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களே ப்ரமாதாக்களில் தலை சிறந்து விளங்குபவர். ஸகல சேதநாசேதந சரீரகனாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்றும், அவனுடைய திருவடித் தாமரைகளில் பண்ணும் ப்ரபத்தியே பரமஹிதமென்றும், *நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்தமயமான நித்ய கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்றும் இங்ஙனே கூறப்படும் அர்த்த விசேஷங்களே ப்ரமேய ச்ரேஷ்டங்களாக விளங்குகின்றன. ஆக இத்தகைய ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேய வைசிஷ்ட்யமே நம்முடைய தரிசனத்தின் சிறப்புக்கு ஹேதுவாகாநின்றது.

3. பரமவைதிகர்களென்கிற ஏற்றம் நமக்கே உரியது. ப்ரத்யக்ஷத்தாலோ அநுமானத்தாலோ அறிந்துகொள்ள முடியாத அர்த்த விசேஷங்களை யறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். "ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்யதே, யத் தம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா" என்கிற ப்ரமாணம் இங்கே அநுஸந்தேயம். வேதத்தை ப்ரமாணமாக இசையாத சார்வாக ஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்களெனப்படுவர். வேதத்தைப் பரமப்ரமாணமாக இசைந்துவைத்தும் பரப்ரஹ்மம் குணசூந்யமென்றும் அலக்ஷ்மீகமென்றும் அசரீரகமென்றும் விபூதிவிரஹிதமென்றும் இங்ஙனே மனம்போனபடி யெல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகளெனப்படுவர். குத்ருஷ்டிகளானாலும் வேதத்தை ப்ரமாணமாக இசையுமவர்கள் வேத பாஹ்யர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்களன்றோவென்று சிலர் நினைக்கக்கூடும். பாஹ்யர்களோடு குத்ருஷ்டிகளோடு ஒரு வாசியில்லை யென்றருளிச் செய்கிறார் கூரத்தாழ்வான் ; (ஸ்ரீவைகுண்டஸ்தவே)—"பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேபி அபாரம் கோரம் தமஸ் ஸமுபயாந்தி நஹீக்ஷஸே தாந், ஜக்தஸ்ய காநந ம்ருகைர் ம்ருகத்ருஷ்ணி கேப்ஸோ:—

காஸாரஸத்வ நிஹதஸ்ய ச கோ விசேஷ:" என்கிற சுலோகம் இங்குக் காணத்தக்கது வேத பாஹ்யர்களும் வேத குத்ருஷ்டிகளும் துல்யயோக க்ஷேமர்களென்பதற்கு ஒரு அற்புதமான த்ருஷ்டாந்தம் காட்டுகிறாரிதில், விடாய் மிகுத்துத் தண்ணீரைத் தேடியோட இரண்டு மிருகங்கள் புறப்பட்டன; அவற்றில் ஒரு மிருகமானது தடாகத்திற் புகாதே கானலைக் கண்டு பாநீய ப்ரவாஹமாக மயங்கி யோடிக்கொண்டே யிருக்கையில் வழியில் புலியின் வாயிலே விழுந்து மாண்டொழிந்தது. இது இப்படியாக, மற்றொரு மிருகமானது விடாய் திரப்பெறுவதற்கு உண்மையாகத் தண்ணீருள்ள தடாகத்திலேயே சேர்ந்தும் துறை தப்பி யிழியவே அங்குக் கிடந்த முதலையினாலே கதுவப்பட்டு மாண்டொழிந்தது. ஆக இரண்டு மிருகங்களும் தடாக ப்ரவேச அப்ரவேசங்களாலே சிறிது வைலக்ஷண்யம் பெற்றிருந்தாலும் விநாசம் இரண்டுக்கும் துல்யமே. அது போலவே குத்ருஷ்டிகளும் பாஹ்யர்களும் வேதப்ராமாண்ய அங்கீகார அநங்கீகாரங்களாலே சிறிது வாசிபெற்றிருந்தாலும் விநாசத்தில் வாசியற்றவர்களே யென்றதாயிற்று. அந்த பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் கிடக்கட்டும். வேதக் கடலில் நாம் உள்ளபடி அவகாஹித்து அர்த்த ரத்தனங்களைக் கொள்ளைகொண்டு அநுபவித்து ஆனந்திக்கக் கடவோம். (முன்னுரை முற்றிற்று)

வேதத்தில் காண்டமிரண்டென்கை.

4. வேதம் கர்மகாண்ட மென்றும் ப்ரஹ்காண்டமென்றும் இருவகுப்பாகவுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்டமென்றும், உத்தரபாகம் ப்ரஹ்ம காண்டமென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்மகாண்டமென்பது. பகவானுக்கு ஆராதன ரூபங்களான யஜ்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்டமென்றும், அக்கருமங்களினால் ஆராதிக்கப் படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூப குணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் சொல்லிற்றாயிற்று. இதுவே, உபநிஷத்தென்கிற பெயராலும் வழங்கும். 'உப நிஷீததி' என்கிற வ்யுத்பத்தி கொண்டது உபநிஷத்தென்கிற பதம். பகவானுடைய அருகேயுள்ள தென்கை. "வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய: என்கிற கீதையின்படி கர்மகாண்டமுங்கூட பகவானை ப்ரதிபாதிக்கவல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷத்து அவ்யவதாநேந ப்ரதிபாதகமாயிருக்கும்.

உபயமீமாம்ஸைகள் அவதரித்தமை கூறுதல்

5. கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமிநியென்னும் மஹர்ஷியெழுந்து பதினாறு அத்தியாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார் அதற்குப் பூர்வ மீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினியால் இயற்றப்பட்டவை யென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரவிரிவு வேண்டா. "வ்ருத்திக்ரந்தே து ஜைமிந்யுபரசிததயா ஷோடசாத்யாய்யுபாத்தா" இத்யாதியான அதிகரண ஸாராவளி ச்லோகம் காண்க. "ஜைமிநீயம் ஷோடசலக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. போதாயந வ்ருத்திக் கிரந்தத்தில் பதினாறு அத்தியாயங்களும் ஜைமிநிப்ரோக்த மென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர். ப்ரஹ்மகாண்டமென்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷி யெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே சாரீரகமீமாம்ஸை யென்று பெயர். உத்தரமீமாம்ஸை யென்றும் வழங்குவர். ப்ரஹ்ம ஸூத்ரமென்பது இதனையே. ஒவ்வோரத்தியாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரகமீமாம்ஸை யென்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் (545) ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்

களையும்; பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களையும் கொண்டது ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரமென்றதாயிற்று.

சாரீரகமீமாம்ஸா பாஷ்யங்களைப்பற்றி

6. தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே தஞ்சமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யய மற நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது இந்த ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரமேயாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. இந்த சாஸ்த்ரத்தின் பொருளை நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்துகொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்மஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார். மஹர்ஷிகளியற்றிய ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம் போன்ற அல்ப மதிகளிடத்தில் பரமகருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குபவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யமியற்றினார். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் (மத்வாசார்) பாஷ்யமியற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமி யெம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லப மதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவ மதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் **மதத்ரய பாஷ்ய**மென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப்படுகின்றன. ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் விசிஷ்டாத்வைதிகளென்றும் பகவத் ராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவாகும். சங்கரபாஷ்யம் மத்வபாஷ்யம் நீலகண்டபாஷ்யம் என்பவை போலல்லாமல் ஸ்ரீபாஷ்யமென்றே தோன்றியுள்ள ப்ரஸித்தி இதன் ஒப்பற்ற பெருமையைப் புலப்படுத்தும்.

ஸ்ரீபாஷ்யத்தின் பெருமை விளக்கம்

7. உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை ஸூத்ரகாரருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிருபிக்கப்பட்டது ஸ்ரீபாஷ்யமேயென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அது நிற்க: ஸ்வாமி ஸ்ரீபாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும்போதே "**பகவத் போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு: தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே**" என்று (முன்னோர் மொழிந்த முறை தப்பாமே வியாக்கியானிப்பதாக) அருளிச் செய்திருப்பதனால் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் அசைக்க முடியாது விளங்குகின்றது. இக்காலத்தவர்கள் சிலர் மேலே உதாஹரித்த பங்க்தியின்மேல் வீணான விவாதத்தைக் கிளப்பி விராமமடைந்து போனார்களென்பது நம்முடைய சதபூஷணீ வஜ்ர குடார—தத்விஜயத்வஜ—சாங்கர சிரோபூஷா-தத்விபூஷணாதிக்ரந்தங்களினால் விசதமாதலால் அதனை ஈண்டு விவரித்துரைக்கின்றிலோம். ஆர்ஷவ்யாக்க்யானகவசிதமாயும் அதிப்ராசீநமாயும் பரம பவித்ரமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமேயென்றும், அதை நிலைநாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமேயென்றும் ப்ராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

விசிஷ்டாத்வைத சப்தார்த்த விவரணம்

8. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மென்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. ஸித்தாந்தமென்பதற்கு ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். மதம் என்றவாறு. இரண்டாயிருக்கும் தன்மை (த்விதா) எனப்படும். த்வைதமென்றாலும் அதுவே பொருள். பேதம் என்றதாயிற்று. அத்தோடு நஞ் சேர்த்தால் அத்வைதம் என்றாகிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம். ஸமஸ்த சேதநாசேதநவஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று அங்கீகரிக்கப்படுவதால் இந்த தரிசனம் விசிஷ்டாத்வைத மெனப்படுகிறது. சித்தும்

அசித்துமாகிய இரண்டு தத்துவங்கள் உண்மையில் கிடையவே கிடையாதென்றும் ப்ரஹ்மமொன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே இந்த தரிசனத்தில் ஸாரமானது.

விசிஷ்டாத்வைதமென்பதற்கு வேறு வித மான பொருளின் பொருந்தாமை.

9. 'விசிஷ்டஸ்ய அத்வைதம் — விசிஷ்டாத்வைதம்' என்று கொள்கையன்றிக்கே, 'விசிஷ்டம் ச விசிஷ்டம் ச விசிஷ்டே; விசிஷ்டயோ: அத்வைதம் — விசிஷ்டாத்வைதம்' என்று கொண்டு ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஸ்தூலசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஐக்கியம் கொள்ளுகை விசிஷ்டாத்வைதம் என்பாருமுளர். இதில் உபபத்தி காண்பதரிது. விசிஷ்டஸ்ய அத்வைதமென்பதே உபபந்நமாகும். 'ப்ரஹ்ம மொன்றே ஸத்யமானது; மற்றவையெல்லாம் மித்யை' என்று சொல்லுகிற அத்வைதிகள் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித்விசிஷ்டத்வத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. ப்ரஹ்மம் போலவே ஜகத்தும் ஸத்யமேயென்று அங்கீகரிக்கிற த்வைதிகளும் (மாத்வர்களும்) சேதநாசேதநங்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ரக்ஷ்யரக்ஷகபாவ ரூபமான ஸம்பந்தம் தவிர ஐக்யவ்யபதேசத்திற்குரிய ஸம்பந்த விசேஷமொன்றும் அங்கீகரிக்கின்றிலர். ஆகவே அவர்களும் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித் வைசிஷ்ட்யத்தை ஏற்றுக்கொள்வதில்லையென்பது தேறிற்று. நமது ஸித்தாந்தத்திலோவென்னில், சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்தையும் ஸத்யமென்று கொள்வதோடு அவற்றுக்கு ஐக்ய வ்யபதேசத்தை நிர்வஹிக்கக் கூடியதான சரீர சரீரிபாவ ரூபமான ஸம்பந்த விசேஷத்தையும் கொள்வதனாலே, உலகத்தில் உடலுக்கும் உயிருக்கும் வேற்றுமை அபலபிக்கமுடியாததா யிருக்கச் செய்தேயும் "சைத்ர : ஏக :" என்கிற வியவஹாரம் எப்படி காணப்படுகிறதோ அப்படியே இங்கும் சேதநாசேதந சரீரகமான ப்ரஹ்மத்திற்கு ஏகத்வேந வ்யபதேசமும் பரஸ்பரம் ஸ்வரூப பேதமும் பொருந்தக் குறையில்லை. இவ்வர்த்த தத்துவத்தைக் காட்டவல்லதான 'விசிஷ்டஸ்ய அத்வைதம் விசிஷ்டாத்வைதம்' என்னும் வ்யுத்பத்தியே யுக்தமானதென்று கொள்க.

த்வைதத்தையும் அத்வைதத்தையும் பற்றின நிரூபணங்கள்.

10. ச்ருதிவாக்கியங்களை யுற்று நோக்கினால் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள்; (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். 'க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர : க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக :' என்பது முதலான ச்ருதி வாக்கியங்கள் சேதந—அசேதந—ஈச்வர ரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன. 'நேஹ நாநாஸ்தி கிஞ்சந, ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' 'தத் த்வமஸி' இத்யாதிகளான ச்ருதி வாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன. ஆக, ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதிபாதனமும் சிலவிடத்து அபேதப்ரதிபாதனமு மிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்ட வேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்றுகொள்ளுகிற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்கியங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து பேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள். த்வைதிகளோவென்னில் பேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்கியங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை உபேக்ஷித்துவிட்டார்கள்.

11. "யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம். ய ஆத்மநி திஷ்டந்" இத்யாதி வாக்கியங்கள் பகவான் ப்ருதிவி முதல் ஆத்மா வரையிலுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமி

யாயிருக்கிறு னென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்கியங்களை அமுக்யார்த்தங்களாகக் கொள்ளுதல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் தட்டப் பெறுதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படுகின்றது.

12. கீழே யெடுத்துக்காட்டிய மூன்று வகுப்பான ச்ருதிவாக்கியங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். ஒரு ச்ருதி வாக்கியத்திலும் அமுக்யார்த்த கல்பனை யென்பது கிடையாது. எங்ஙனே யென்னில், கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட யஸ்யாத்மா சரீரமித் யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்று பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமு மின்றிக்கே பொருந்தச் செய்யவல்லவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்கியங்கள்-என்கிற காரணத்தினுல் இவற்றுக்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தமானது.

13. "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினுலேற்பட்ட அபேதத்தையும் 'க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினுலேற்பட்ட பேதத்தையும் பொருந்த விடும் வழி கேண்மின். சேதநா சேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களின் ஸ்வரூப பேதம் உண்மையாதலால் க்ஷரம் ப்ரதாந மித்யாதி பேத ச்ருதியானது பேதத்தைச் சொல்லி யிருப்பது பாங்கே. ப்ரஹ்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க்கொண்டு ஒன்றேயாகிறபடியால் (ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம) இத்யாதியான அபேத ச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. 'யஸ்யாத்மாசரீரமித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனை ஸர்வாந்தர்யாமி யென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பது நம் ஆசாரியர்களின் நிருபணம்.

14. சிதசிதீச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண் செலுத்தினுல் பேதம் க்ரஹிக்கப்படுகிறது. அசேதநமாகிய சரீரம் வேறு; அதனுள்ளுறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று பேத ப்ரதிபத்தி சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டரவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்து பேத ப்ரதிபத்தியும் 'அவயவ ஸங்காதம் ஒன்று என்று பார்க்குமிடத்து அபேத ப்ரதிபத்தி' யும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யஜ்ஞ தத்தன் ஒருவன் இத்யாதி வ்யவஹாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்கவேணும். 'தேவதத்த க்ருச:, யஜ்ஞதத்த: ஸ்தூல: இத்யாதிவ்யவஹாரங்களில் க்ருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களேயென்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ, யஜ்ஞதத்த: ப்ரதிபாவாந்' இத்யாதி வ்யவஹாரங்களில் மேதையும் ப்ரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல வெவ்வேறுபட்டவை. ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வவ்யவஹாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனை சரீரி ஒருவன்' என்னுமபிஸந்தியாலத்தனை யன்றே. இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற ச்ருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே. ஏவஞ்ச பேதத்திற்கும், அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லை யென்றதாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநா வஸ்துஸத்பாவம் ப்ராமாணிகமாகையாலே அபலபிக்க வொண்ணுததே. இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவஸித்தமாகையாலே அபலபிக்க வொண்ணுததே. ஆக உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் சரீர சரீரி பாவ நிபந்தநமாகவே ஒன்ருக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட சரீர சரீரி பாவத்தை யுணர்த்துகின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணுதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு நமது மதத்தில் மிகுந்த கௌரவமுள்ளது. அத்வைதி

கள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேத ச்ருதிகளை அநாதரிப்பது போலவும் நாம் ஒருவகையான ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதி ஸாமரஸ்யம் நமக்கே யொழியப் பிறர்க்கில்லை யென்பது கல்வெட்டாகத் தேறி நின்றது.

சரீராத்ம பாவமே ப்ரதாநப்ரதிதந்த்ரார்த்த மென்பது:

15. மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றை யெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று பெயரிடுவதில் என்ன விசேஷமென்னில், கேண்மின். ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகத்சரீரகத்வ மென்பதே ப்ரதாநமானது. ஆனது பற்றியே இது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்த மெனப்படுகிறது. இதுவே ப்ரதாந மென்பது எங்ஙனமென்னில் ஸர்வச்ருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதி விஜய ப்ரயோஜநகமாயிருப்பதனாலே, இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க. இந்த சரீராத்ம பாவத்தைத் தெரிந்து கொள்ளாமையினாலன்றோ பிற மதத்தவர்கள் ஸர்வ ச்ருதிஸாமரஸ்யத்தை நிர்வஹிக்க மாட்டாமல் தளருகின்றார்கள். குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே யென்க. இங்கு "யத்யேதம்யதி ஸார்வபௌமக திதம்" இத்யாதியான வேதாந்தாசார்ய ச்லோக ரத்நத்தைத் திடமாகக்கொள்க. இந்த ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்கு தெரிந்துகொண்டே வொருவ்யக்தி நிற்கு மிடத்தில் விமதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும் அவர்களுக்குப் பங்கமேதவிர வேறில்லை யென்பது இதன் கருத்து.

சரீராத்மபாவம் ஸூத்ரகாராபிமத மென்று விவரித்து இந்த பரிச்சேதத்தினை நிகமித்தல்.

16. ஸித்தாந்தத்தில் சரீராத்மபாவமே பிரதானமென்பது கீழே உபபாதிக்கப்பட்டது. ப்ரஹ்மஸூத்ரகாரருக்கும் இதுவே அபிமதமென்பதை மூதலித்து இம் முதல் பரிச்சேதம் முடிக்கப்படுகிறது. இவ்விஷயத்தில் சாரீரக மீமாம்ஸை முழுவதுமே பிரமாணமாகக் காட்டக் கூடியதாயினும் வ்யுத்பித்ஸுக்களின் புத்தியில் ஏறுவதற்காக ஸம்க்ஷேபமாய் நிரூபித்தல் நலமென்று கருதி அந்த சாரீரக மீமாம்ஸையில் ஒரு அதிகரணத்தை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டிப் பிராமாணிகர்களின் மனத்தில் பதியவைக்கிறோம். அதில் முதலத்யாயம் நான்காவது பாதத்தில் வாக்யாந்வயாதிகரண மென்பது ப்ரஸித்தமானது. நான்கு ஸூத்திரங்கள் கொண்டது இவ்வதிகரணம். ப்ருஹதாரண்யகோப நிஷத்தில் ப்ரஸித்தமான மைத்ரேயீ ப்ராஹ்மணமென்னும் பகுதியில் அம்ருதத்வோபாயமேதென்று கேட்டமைத்ரேயீயைக் குறித்து யாஜ்ஞவல்க்யருடைய விடை:

"ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: என்பது. இதில் ஆத்மா என்னும் சப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாவா? ஜீவாத்மாவா? என்று விசாரம் ப்ரஸக்தமாக பரமாத்மாவே யென்று நிர்ணயம் செய்வது இவ்வதிகரணத்தின் ப்ரமேயம். இது வாக்யாந் வயாத் என்கிற முதல் ஸூத்ரத்தினால் தேறியது. மைத்ரேயீப்ராஹ்மணத்திலுள்ள மஹாவாக்யம் ஸமஞ்ஜஸமாக அந்வயிக்க வேண்டுகையாலே அந்த வாக்யத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஆத்மா கருமபலனை யநுபவிப்பவனான ஜீவாத்மாவாக இருக்கமுடியாது, பரமபுருஷனே யாகவடுக்கும் என்று சொல்லப்பட்டதாயிற்று.

17. இதற்கு மேல் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, இங்குப் பரமாத்மா விவக்ஷிதனாகில் ஜீவாத்ம வாசகமான ஆத்மா என்கிற சொல்லை யிட்டுச் சொல்லுவானேன்? பரமாத்மாவென்றே பிரயோகிக்கலாகாதா? என்று இக்கேள்விக்கு ஸூத்ரகாரரான வியாஸரால் மேலே மூன்று ஸூத்ரங்களினால் ஸமாதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமிமதம், காசக்ருத்ஸ்ந மதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. முறையே ஸூத்ரங்கள்—

(1) ப்ரதிஜ்ஞாஸித்தேர் லிங்கமாச்மரத்ய:

(2) உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடு லோமி:

(3) அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:

என்கிற இம்மூன்று ஸூத்திரங்களும் மூன்று மஹர்ஷிகளின் நிர்வாஹங்களைத் தெரிவிப்பனவாம். இவற்றை அடைவே சிறிது விவரிக்கிறோம்.

18. ஆச்மரத்ய மதம். ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்ய காரண பாவம் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கையாலே அதனால் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. காரணமான மண்ணுக்கும் அதன் கார்யமான பானைக்கும் அபேதம் காண்கிறதன்றோ. ஆக இவ்வபேதத்தைத் தெரிவிப்பதற்காக பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தியுள்ளதென்றார் ஆச்மரத்யர்.

19. இனி ஔடுலோமி மதம். கீழே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாதுவன்றென்று கொண்ட ஔடுலோமியானவர்—முக்தி தசையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடு அபேதம் ச்ருதி ஸித்தமாயிருக்கையாலே முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தை யவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார்.

20. காசக்ருத்ஸ்ந மதம். கீழே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம் வரையில் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு பேதமுள்ளதென்றும், முக்தி தசையில் அபேதமென்றும் கொள்ளப்படுகிற விது, "பரமாத்மாத்மநோர்யோக: பரமார்த்த இதீஷ்யதே, மித்த்யைதத் அந்யத் த்ரவ்யம் ஹிநைதி தத் த்ரவ்யதாம் யத:" என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வசன விருத்தம், வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்றோடொன்று சேருமேயொழிய ஐக்கியத்தை யடையமாட்டாவென்று இதில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றதன்றோ. முக்தி தசையில் ஜீவாத்மாவுக்கு அபஹத பாப்மத்வாதி ஸ்வரூபம் ஆவிர்பவிக்குமதொழிய பரமாத்மாவோடு ஐக்யாபத்தியென்பதில்லை யென்னுமிடம் (4-4-1.) ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆக இத்தனைக்கும் முரணாக நிர்வஹிப்பது அநுசிதம் என்று கொண்ட காசக்ருத்ஸ்நர் பரமாத்மா ஜீவாத்மாவினுள் அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம சரீரத்வமும் "ய ஆத்மநி திஷ்டந் யஸ்யாத்மா சரீரம்" இத்யாதி ச்ருதி ஸித்தமாகையாலும், சரீர வாசகங்களான சப்தங்களுக்கு சரீரி பர்யந்த வாசகத்வம் ஆக்ருத்யதிகரண ஸித்தமாகையாலும் ப்ரக்ருதத்தில் ஜீவாத்மவாசியான ஆத்ம சப்தத்தைப் பரமாத்ம பர்யந்த வாசகமாக நிர்வஹிப்பதுதான் உசிதமென்று கருதினர்.

இங்ஙனே வரிசையாக மூன்று மதங்களை உதாஹரித்த ஸூத்ரகாரர் மேலே நான்காவது மதத்தைச் சொல்லாமையினால் காசக்ருத்ஸ்ந மதமே ஸூத்ரகாராபி மதமென்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது. இது விசிஷ்டாத்வைத மதத்திற்கு விஜயத்வஜமானது.

காசக்ருத்ஸ்நமதத்தை நன்கு உபபாதித்தல்.

21. இங்கே அத்வைதிகள் சொல்லுவதென்னவென்றால், காசக்ருத்ஸ்நமதந்தான் ஸூத்ரகாராபிமதமென்பதில் எமக்கும் ஸம்மதம், ஆனால் **அவஸ்திதே:** என்பதற்கு—'பரமாத்மாவானவர் ஜீவாத்மாவினிடத்தில் அந்தர்யாமியாயிருப்பதனாலே' என்று நீங்கள் கூறுகின்ற பொருள் ஸாதுவன்று. 'பரமாத்மாதானே ஜீவாத்மாவாக இருப்பதனாலே' என்கிற பொருள்தான் அவஸ்திதே: என்பதற்கு ஸமஞ்ஜஸமாகும். ப்ரக்ருதத்தில் ஐக்கியத்தைப் பொருந்தவிட வேண்டியது ப்ரதானம். இங்ஙனே பொருள் கூறினாலும் ஐக்கியம் பொருந்திவிடுகின்றதன்றோ. காசக்ருத்ஸ்நர் சரீராத்மபாவத்தை யவலம்பித்தே ஐக்யத்தைப் பொருந்தவிட்டாரென்று எதுக்குச் சொல்லவேண்டும்? என்கிறார்கள் அத்வைதிகள். இது ஸமஞ்ஜஸமான வாதமன்று என்பதை நன்கு நிரூபிக்கிறோம். "அத்தா சராசரக்ரஹணாத்" என்கிற உபக்ரமஸூத்ரத்தைக் கொண்ட அத்த்ரதிகரணத்தில் "குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்சநாத்" என்கிற ஸூத்ரத்தில் த்விவசநாந்தமான ஆத்மாநௌ என்கிற சப்தத்தினால் பரஸ்பர பிந்நஸ்வரூபசாலிகளான ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஹ்ருதய குஹாப்ரவேசம் ச்ருதி ஸித்தமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜீவ ப்ரஹ்மங்களுக்கு நிருபாதிகமான பேதமே ச்ருதிக்கு அபிமதமென்று ஸூத்ரகாரர் அபிப்ராயப்பட்டிருப்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. ஆக ஜீவப்ரஹ்மங்களுக்கு ச்ருத்யபிமதமான ஸ்வரூப பேதம் பழுது படாதபடி நிர்வஹிப்பதுதான் ஸூத்ரகாராபிமதமென்று இசைந்து தீரவேணும். ஏவஞ்ச, ஜீவப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யத்தை யவலம்பித்து நிர்வஹிக்க வந்தது. அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:* என்கிற ஸூத்ரமென்று சொல்லுவது பொருந்தமாட்டாது. மேலும், அவஸ்திதி: என்கிற சப்தமானது "பூதலே கட: அவதிஷ்டதே, ப்ராஸாதே தேவதத்த: அவதிஷ்டதே" இத்யாதி வ்யவஹாரங்களிற்போல ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து இருப்பதைத்தான் சொல்லக்கடவது: "ப்ருதிவ்யாம் திஷ்டந் அப்ஸு திஷ்டந் தேஜஸி திஷ்டந் ஆகாசே திஷ்டந் ஆத்மநி திஷ்டந்" இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் பலகால் காணப்படுகிற ஷ்டாதாது ப்ரயோகத்தை அடியொற்றியே அவஸ்திதே: என்கிற ஸௌத்ர ப்ரயோகமுள்ளதென்பதை ப்ராமாணிகர்களின் உள்ளம் அநாயாஸமாக க்ரஹிக்கும். ஆக காசக்ருத்ஸ்ந மதம் அத்வைதிகள் கூறுகிறபடி பொருந்தாது. ஏவஞ்ச, வாக்யாந்வயாதிகரணத்தில் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தீகரிக்கப்பட்டதென்று தெளிவாயிற்று.

விசிஷ்டாத்வைத தரிசனத்தில்
முதல் பரிச்சேதம் முற்றிற்று. *



சண்டேச அனுக்கிரகமூர்த்தம்—கங்கைகொண்ட சோழபுரம்.

CONNEMARA ... LIBRARY

விடை விளக்கம்

1. 'பகவத் பிரபந்தம்' என்று நம்மாழ்வார் அருளிய **திருவாய் மொழிக்குப்** பெயர். அதற்குத் திருக்குருகைப்பிரான்பிள்ளை நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை முதலியவர்கள் அருளிச் செய்த **வியாக்கி யானங்கள்** 'பகவத்விஷயம்' எனப்படும்.

வேத இதிகாச புராணங்கள் அனைத்துமே பகவானைப் பற்றிப் பேசுபவை யாக இருப்பினும், அவைகட்கு இச்சிறப்புப் பெயர் வாய்த்தில. ஏனெனில் வேதங்கள் முக்குணங்களோடு கூடியவையாய், **'ஜ்யோதிஷ்டோமம்'** முதலிய நிலையற்ற கருமங்களையும், **'சுவர்க்கம்'** முதலான மிகச்சிறிய புருஷார்த்தங்களையும் பரக்கப் பேசுகின்றன. 'உபநிடதங்களோ, **பேதம் அபேதம்** முதலிய வாக்கியங்களால் தத்துவங்களைக் கூறிப் பொருள் ஒன்றோ? பலவோ? என ஐயம் தோன்றுதற்கே இடம் தருகின்றன.

வால்மீகி பகவான் ஸ்ரீ இராம காதை என்று தொடங்கிக் கங்கையின் தோற்றம் முதலிய வேறு பொருள்களைப் பற்றிய வரலாறுகளையும் பேசினார். 'நாராயண கதை' கூறத் தொடங்குகின்றேன் என்று குறிப்பிட்ட வியாசரும், **பீஷ்மர்** முதலிய அரசர்களுடைய பிறப்பு முதலிய செய்திகளை யுரைத்தார்.

இங்ஙனமெல்லாம் இன்றித், '**திருமாலவன் கவி**' என்கிறபடி, நூற்றுக்கு நூறு முழுவதும் பகவான் விஷயமாகவே அமைந்திருக்கையினால், திருவாய் மொழிக்குப் 'பகவத் பிரபந்தம்' என்றும், அதன் வியாக்கியானங்களுக்குப் 'பகவத் விஷயம்' என்றும் பெயர் வழங்குகின்றது.

2. இராமாநுஜருக்குப் பெயர். (1) அவர் திருவவதரித்த 12-ஆம் நாளில் அவருக்கு நாமகரணவிழா நிகழ்ந்தபொழுது, பெரிய திருமலை நம்பிகள் '**இளைய ஆழ்வார்**' என்று பெயரிட்டு வழங்கினார். (2) காஞ்சியில் விளங்கும் வரதராஜர் ஆகிய தேவப் பெருமாள், இவர் துறவு நெறியை மேற் கொண்டபொழுது **இராமாநுஜர்** என்ற பெயரை அளித்தார். (3) திருவரங்கம் சென்றபோது ஸ்ரீரங்கநாதர், இவரை **உடையவர்** எனக் கூறி வாழ்த்தியருளினார். (4) 'நான் ஒருவன் நரகம் சென்று நலிவுற்றா லும் குற்றமில்லை. ஏனைய மக்கள் எல்லோரும் அறிந்து உய்ந்து ஈடேறட்டும்' என்னும் உயரிய நோக்குடன், தம் பக்கல் கேட்ட மறைநுண் பொருளைப் பிறரெல்லார்க்கும் அறைகூவி அறிவுறுத்தருளிய இவர்தம் இனிய பண்பு நலனை வியந்து 'எங்களுக்கெல்லாம் தலைவர்' என்னும் பொருளில், திருக் கோட்டியூர் நம்பிகள் இவரை **எம்பெருமானார்** எனப் பாராட்டிச் சிறப் பித்தார். (5) இவர்தம் பக்தி ஞான வைராக்கிய விசேடப் பண்பு நலன் களை யுவந்தும், "நூறு நறும்பொழில்" என்னும் பாசுரத்தில் திருமாலிருஞ் சோலை நம்பிக்குத் தான் சொல்லி வைத்த நேர்த்திக் கடனை நினைந்து நிறை வேற்றி யுதவிய செயற்றிறத்திற்கு மகிழ்ந்தும், **கோயில் அண்ணன்** என்று ஸ்ரீ ஆண்டாள் இவரைப் புகழ்ந்தார். (6) பிரமசூத்திரம் பகவத்கீதை முதலியவற்றிற்கு இவர் எழுதிய பாஷ்யங்களின் சிறப்பினை வியந்து, ஸ்ரீ சரசுவதியால் இவருக்குப் பாஷ்யகாரர் என்னும் பெயர் வழங்கப் பெற்றது. (7) இவருக்குச் சதாபிஷேகம் நிகழ்ந்த சமயத்தில், **எதிராஜர்** (துறவி வேந்தர்) என்னும் பெயர் உண்டாயிற்று.

3. காஞ்சிபுரத்திற்கும் 12 பெயர்கள் உண்டு. (1) காஞ்சி என்னும் ஒருவகை மரங்கள் நிறைந்திருந்ததனல் **காஞ்சிபுரம்.** (2) பிரளய வெள்ளம் வந்து அழிக்காமல் இறையருளாற் காக்கப் பெறுதலின் **பிரளய சித்து.** (3) உமையம்மை வழிபட்டுத் தழுவக் குழைந்து நின்று சிவபெருமான் மகிழ்ந்தருளிய தலமாதலால் **சிவபுரம்.** (4) பிரமதேவன் செய்த வேள்விக்காக மகிழ்ந்து மகாவிஷ்ணு அருள் புரிந்தமையால் **விஷ்ணுபுரம்;** (5) பிரமன் மால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் இடைவிடாமல் தங்கி யுறைந்து வருதலால் **திரிமூர்த்தி வாசம்.** (6) பிரமதேவன் இங்குள்ள கச்சபேசுரரை வழிபட்டு அருள்பெற்றதனுல் **பிரமபுரம்,** (7) அவரவர்கள் விரும்பிய பயன்களை யெல்லாம் தவருமல் நிறைவேற்றி யளிப்பதனுல் **காமபீடம்.** (8) தவஞ் செய்யக் கருதும் தேவர்கள் அனைவரும் விரும்பி வந்து அடைவதனுல் **தபோமயம்.** (9) பிற தலங்களைக் காட்டிலும் தருமத்தின் பயனை மிகுதியாகப் பெருக்கியளித்து, உலகத்திற்கே சாரம் என விளங்குவதனுல் **ஜகத் சாரம்.** (10) இங்கே வந்து தவம் புரிபவர்களுக்கு எல்லாப் பேறுகளும் சித்திக்கும்படி செய்தலால் **சகல சித்தி** (11) சிவபிரான் கட்டளையின்படி ஐயை என்னும் தெய்வக் கன்னியினுற் காவல் புரியப் பெறுதலால் **கன்னிகாப்பு.** (12) துண்டீரன் என்னும் அரசன் ஒருவன் தோன்றித் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியதனுல் **துண்டீரபுரம்.**

— கந்தபுராணம், திருநகரப்படலம்.

4. **திருக்கழிப்பாலை, திருமயிலை** என்னும் இரண்டு பாடல் பெற்ற சிவதலங்கள் முன்பு இருந்த பழைய இடத்தை விட்டு, இடம் பெயர்ந்து அமைந்துள்ளன. முன்னையது சோழ நாட்டிலும், பின்னையது தொண்டை நாட்டிற் சென்னையிலும் உள்ளது. திருக்கழிப்பாலை சிதம்பரத்திற்கு அருகே, கொள்ளிட நதியின் வடகரையில் கடலுக்கு அணித்தாக அமைந்திருந்தது. சென்ற 19-ஆம் நூற்றுண்டில் கொள்ளிடம் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து, முன்பு இருந்த பெரிய கோயிலைச் சிதைத்து விட்டது. அதன் சிதை பொருள்களைக்கொண்டு, **ஸ்ரீ பால்வண்ணநாதர்** ஆகிய கருவறைச் சிவலிங்கத்தினைச் சிதம்பரம் இருப்புப் பாதை நிலையத்திற்குத் தென்கிழக்கில் சிறிது தொலைவில் உள்ள **சிவபுரி** என்னும் இடத்திற் பிரதிட்டை செய்து புதிய கோயில் அமைக்கப் பெற்றுள்ளது. இப்போதுள்ள கோயிலுக்கு ஈசான திசையில் இரண்டுகல் தொலைவில் பழைய கோயில் அமைந்திருந்தது. அப்பர் (5) சம்பந்தர் (2) சுந்தரர் (1) என்னும் மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இத்தலத்திற்கு 8 திருப்பதிகங்கள் இருக்கின்றன.

திருஞானசம்பந்தர் என்பைப் பெண் ஆக்கிய அற்புதம் நிகழ்ந்த **திருமயிலைக் கபாலீச்சுரர்** கோயில் முன்பு கடற்கரையைச் சார்ந்து இருந்தது. கி. பி. 15 ஆம் நூற்றுண்டில் போர்ச்சுகீசியர்கள் நம் தமிழகத்திற் சென்னையில் வந்து குடியேறிய பொழுது நிகழ்ந்த போர்களில், பழைய கோயில் சிதைக்கப்பட்டது எனத் தெரிகிறது. இப்போதுள்ள கோயில் கி. பி. 1560 ஆண்டிற்குப் பின்னர்த் தோன்றியதாகும். போர்ச்சுகீசியர்களாற் சென்னையிற் பல இந்துக் கோயில்கள் அழிக்கப் பெற்றமையினை **இராபர்ட் ஸ்யூவெல்** (Robert Sewell) என்னும் வரலாற்றறிஞர் ' **மறக்கப்பட்ட பேரரசு** ' (The Forgotten Empire) என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சூளுறவு தவறித் திருவொற்றியூர் எல்லையை விட்டுக்கடந்த பொழுது, கண்

பார்வை மறையப் பெற்றுக் கலங்கி, "பிழையுளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால் பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய் ..." எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியருளிய **திருவெண்பாக்கம்** கோயில், சென்னைப் பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்தினால் நீருக்குள் அழிந்து மறைந்து கிடைக்கின்றது. "ஈசன் அடியார் இதயம் கலங்கிடத் தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்; வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும் நாசமதாகுமே நம்நந்தி ஆணையே" எனத் திருமூலர் **திருமந்திரம்** கூறுமாறு போல, மிகவும் சிறந்த சிவனடியார் ஆகிய சுந்தரர் தம் மனம் பெரிதும் வருந்தி **'உளாயோ?'** என வினவிப் பாடியதன் விளைவாகவே, இந்நிலைமை ஏற்பட்டது எனவும் பெரியவர்கள் இதுபற்றிக் கூறுவது உண்டு.

5. செம்பியன் மாதேவியார் கண்டராதித்த சோழரின் (கி.பி. 953—957) **மனைவியார்;** மதுராந்தகன் என்னும் உத்தமசோழர்க்குத் (கி.பி. 970—985) **தாயார்.** தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைக் கட்டிய முதலாம் இராஜராஜ சோழனின் (கி.பி. 985—1014) பெரிய **பாட்டியார்.** சிவபக்தியில் மிகவும் சிறந்தவர். ஏறத்தாழ 85 ஆண்டுகள் வரையில் வாழ்ந்திருந்த சிவநலஞ் சான்ற இவ்வம்மையார்தான், 'அருள்மொழி வர்மன்' என்னும் முதலாம் இராஜராஜ சோழனை இளமையிற் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவர். இவர்பால் இராஜராஜ சோழன் எல்லையில்லாப் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு விளங்கியிருந்தான். நாகப்பட்டினத்திற்கு அருகில் இவர் பெயரால் 'செம்பியன்மாதேவி' என்னும் ஓர் ஊர் உள்ளது. அங்குள்ள (1) **கயிலாசநாதர் கோயில்** இவர் கட்டியதேயாகும். மற்றும் (2) கோனேரிராஜபுரம் (3) விருத்தாசலம் (4) தென் குரங்காடுதுறை (5) திருவக்கரை (6) திருக்கோடிகா (7) குத்தாலம் (திருத்துருத்தி) (8) திருமணஞ்சேரி (9) திருவாரூர் அரநெறி (10) ஆநாங்கூர் ஆகிய இடங்களிலும் இவர் கற்றளிகள் எடுப்பித்துள்ளார்.

சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறை ஆகிய திருவிசைப்பாவில் உள்ள "**கோயிற்பதிகம்**" என்னும் பாடல்களைப் பாடியருளிய சிறந்த சிவபக்தரும், கல்வெட்டுக்களிற் 'சிவஞான கண்டராதித்த தேவர்' எனப் புகழ்ந்தோதப் பெறுபவரும் ஆகிய தம்முடைய கணவரின் நினைவாகக் **கண்டராதித் தேச்சுரம்** என்னும் பெருங்கற்றளியினைத் **திருநல்லம்** (கோனேரி ராஜபுரம்) என்னும் பாடல் பெற்ற சிவதலத்தில் இவர் எடுப்பித்திருக்கின்றார். அக்கோயிலில் கண்டராதித்தர் சிவலிங்கத்திற்குப் பூசை செய்வது போல், ஓர் அழகிய சிற்பமும் இவரால் அமைக்கப் பெற்றுள்ளது. பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள **திருவக்கரைச்** சிவன் கோயில் இவரால் கி.பி. 1001 ஆம் ஆண்டில் கட்டப் பெற்றது. இதுவே இவர்தம் வாழ்நாளிற் கடைசியாகக் கட்டிய கோயில் எனத் தெரிகின்றது.

6. தொண்டைநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் **நடுவில்** அமைந்துள்ள பகுதிக்கு 'நடு நாடு' என்ற பெயர். '**திருமுனைப்பாடிநாடு**' என்றும் அதற்கு மற்றொரு பெயர் உண்டு. இந்நாட்டைச் சேர்ந்த **திருக்கோவலூர்** என்னும் சிறந்த தலத்தில், முதலாழ்வார்கள் ஆகிய பொய்கையார் பூதத்தார், பேயார் என்னும் மூவரும் ஒருநாள் இரவில், ஒரு திருவிடைகழியில் ஒருவரையொருவர் அறியாமற் சந்தித்து, ஞானச்சுடர் விளக்கு ஏற்றி ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு தரிசித்து மகிழ்ந்தனர். மேலும் சைவ சமய குரவர்கள் மூவருள் **அப்பர், சுந்தரர்** என்னும் இருவர் திரு

வவதாரம் செய்தருளிய நாடு இதுவேயாகும். சைவசித்தாந்தப் பேராசிரியர்கள் ஆகிய **மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார்** என்பவர்கள் தோன்றி வாழ்ந்திருந்ததும் இந்நாடேயாகும். சங்ககாலத்தில் **மலையமான் திருமுடிக்காரி** என்னும் மன்னன், திருக்கோவலூர் தலைநகராக அமைய இந்நாட்டினை ஆண்டுவந்தான். 'முனையதரையர்' என்னும் வீரஞ் செறிந்த குடிமக்கள் வாழ்ந்து வந்ததனால், இதற்கு **முனைப்பாடி** (முனைய தரையர்+பாடி) எனப் பெயர் அமைந்தது.

பாவரும் தமிழாற் பேர்பெறு பனுவற்
  பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருங்கி மொழிவிளக்கு ஏற்றி
  முகுந்தனைத் தொழுத நாடு!
தேவரும் மறையும் இன்னமும் காணாச்
  செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
  பிறந்தநாடு இந்த நாடு!

—வரந்தருவார்,
வில்லிபுத்தூரார் பாரதம்.

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ, பேருலகிற்
சிறந்த திரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு

—சேக்கிழார்

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடித்த வேணி
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு;
மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு!

7. 'திருக்களிற்றுப் படியார்' என்பது சைவசித்தாந்த நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் திருக்கடவூர் **உய்ய வந்த தேவர்.** 'நாலடியார்' 'திருவுந்தியார்' 'திருக்கோவையார்' 'சிவஞானசித்தியார்' என்பன வற்றைப் போன்று, சிறப்புடைமை காரணமாக 'ஆர்' விகுதி கொடுத்து இந்நூல் வழங்கப் பெறுகின்றது. 100 வெண்பாக்களால் அமைந்துள்ள இந்நூல், ஆசிரியர் மெய்க்கண்டார் இயற்றியருளிய **சிவஞானபோதம்** என்னும் நூலுக்கு முற்பட்டது. திருவியலூர் உய்யவந்த தேவர் என்பவர் இயற்றிய **திருவுந்தியார்** என்னும் நூலினை முழுவதும் அடியொற்றி, அதன் பொருளை அழகுற விரித்துரைக்கும் சிறந்த அனுபவ ஞானப் பனுவல் இது!

இவர் இந்நூல் இயற்றிய காலத்தில், இவர் கீழ்ச்சாதியினர் ஆதலின் இந்நூலை ஏற்றுக்கொள்ளுதல் கூடாது என்று பலர் கூறினர்; ஆனால் அறிவும் பக்குவமும் வாய்ந்த தக்கோர்கள் சிலர், இந்நூலைத் தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் அம்பலவாணரின் திரு முன்பு கொண்டு சென்று, அங்கேயுள்ள **திருக்களிற்றுப்படி** யின்கண் வைத்தனர். அதுபோது அப்படியிற் சிற்பமாகச் செதுக்கப்பெற்றிருந்த யானையின் துதிக்கையானது, இறைவன் திருவருளால், அந்நூலை எடுத்து அம்பலவாணரின் திருவடிக்கண் வைத்தது. இவ்வற்புதம் கண்டு வியந்த மக்கள் அனைவரும், இந்நூலின் சிறப்பினை யுணர்ந்து திருக்களிற்றுப்படியார் என்றே இதனை வழங்கலாயினர்!

வையகம் பொலிய மறைச்சிலம்பு ஆர்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றுரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்த அன்பு உந்தச்
செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு

எனவரும் பெரிய புராணச் செய்யுள், தில்லையில் உள்ள 'திருக்களிற்றுப் படி' என்பதனைக் குறிப்பிடுதல் காணலாம்.

8. 'சூதன் ஒலிமாலை' என்று திருஞானசம்பந்தர் புராணங்களைக் குறிப்பிடுகின்றார். நைமிசாரணியம் என்னும் இடத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கெல்லாம், புராணங்கள் பலவற்றையும் விரித்துரைத்து விளக்கிக் கூறிப் பரப்பியருளிய பெருமைக்கு உரியவர் **சூதமகா முனிவர்** ஆதலின், அவரால் அருளிச் செய்யப் பெற்ற புராணங்களைச் 'சூதன் ஒலிமாலை' என்றே சிறப்பித்துத் திருஞானசம்பந்தர், போற்றியருளினர்.

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே

— திருப்பாசுரம்.

8. 'சூதன் ஒலிமாலை' என்றது புராணங்களையேயாகும் என்பதனை, மேற் குறித்த திருப்பாசுரத்திற்குச் சேக்கிழார் சுவாமிகள்,

வேத முதல்வன் எனும்மெய்த் திருப்பாட் டினில்நேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாதம் முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓதுஎன் றுரைசெய் தனர்; யாவும் ஓதாது உணர்ந்தார்

என்று செய்திருக்கும் விளக்கவுரை கொண்டு தெளியலாம்.

பதினெண் புராணங்கள் ஆவன:

1.	சைவம்	7.	வாமனம்	13.	காருடம்
2.	பவிஷ்யம்	8.	மச்சம்	14.	நாரதம்
3.	மார்க்கண்டம்	9.	கூர்மம்	15.	விஷ்ணு
4.	இலிங்கம்	10.	பிரமாண்டம்	16.	பாகவதம்
5.	காந்தம்	11.	பிரமம்	17.	ஆக்கிநேயம்
6.	வராகம்	12.	பதுமம்	18.	பிரமகைவர்த்தம்

இவற்றுள் முதற் பத்தும் சிவபிரானுக்கு உரியவை; அடுத்த இரண்டும் பிரமனுக்கு உரியவை; அடுத்த நான்கும் திருமாலுக்கு உரியவை. ஆக்கிநேயம் அக்கினி தேவனுக்கும், பிரமகைவர்த்தம் சூரியனுக்கும் உரிய புராணங்கள் ஆகும்.

— கந்தபுராணம் பாயிரம்,
கச்சியப்ப சிவாசாரியர்.

9. ஸ்ரீரங்கத்தில் ஏழு திருவீதிகள் (பிராகாரங்கள்) அமைந்திருக்கின்றன. நாம் வெளியேயிருந்து கோயிலுக்கு உள்ளே செல்லும் முறையில், பின் வருமாறு திருவீதிகள் அமைந்துள்ளன.

1. மாடமாளிகை சூழ் திருவீதி.
2. சோழன் திருவிக்கிரமன் திருவீதி
3. அகளங்கன் திருவீதி.
4. ஆலிநாடன் திருவீதி.
5. குலசேகரன் திருவீதி.
6. இராஜ மகேந்திரன் திருவீதி.
7. தர்மவர்மன் திருவீதி.

10.

1 ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூர் உடைய கோவே

—திருநாவுக்கரசர்

2 மத்த யானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள்!
செத்த போதில் ஆரும் இல்லை சிந்தையுள் வைம்மின்கள்!
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே!
அத்தர் கோயில் எதிர்கொள் பாடி என்பது அடைவோமே!

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

3 இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்!
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை; அன்றிஒன் றில்லை;
யார்உனை அறியகிற் பாரே?

—மாணிக்கவாசகர்

4 ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் புரிந்து,
'மாழை மான்மட நோக்கி உன் தோழி;
உம்பி எம்பி' என் றொழிந்திலை உகந்து
'தோழன் நீ எனக்கு' இங்கொழி என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ணா! நின் அடியிணை அடைந்தேன்!
அணிபொழில் திரு அரங்கத் தம்மானே!

—திருமங்கையாழ்வார், பெரியதிருமொழி.

இஃது இராமபிரான் வேடன் ஆகிய குகனைத் தோழமை கொண்டு, "நீ என் தோழன் (சகோதரன்); சீதை நினக்குத் தோழி (கொழுந்தி); இலக்குவன் நின் தம்பி" என்று உரிமையும் உறவும் பாராட்டிக் கூறியருளிய சொற்களை நினைந்து உருகிப் பாடியதாகும்.

இலங்கையில் அசோகவனத்தில் இராமபிரானைப் பிரிந்து தனியே வருந்தியிருந்த சீதையின் துயர நிலையினை விளக்கும் முறையில்,

சமயப் பொருட் குறிப்புக்கள்

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

6. "வேதம்" என்ற சொல்லின் பொருள்.

நூலாசிரியர்கள் அளவை என்ற சொல்லால் கூறப்படும் பிரமாணத்தைக் காட்சிப்ரமாணம் (அதாவது காது, மூக்கு, கண் முதலிய கருவிகளால் அளந்து அறிதல்) முதலிய பல பிரமாணங்களாக வகுத்தனர். அவர்களால் கூறப்பட்ட எத்தகைய பிரமாணங்களாலும் அறியமுடியாத உண்மையை அறிவிப்பதால், வேதம் என்ற பெயர் ஏற்பட்டது. 'வேதயதி' பிரமாணங்களால் அறிய முடியாத உண்மையை அறிவிக்கிறது என்று பொருளாகும். இதையே தமிழ் மொழியில் 'மறை' என்பார்கள். மற்றைய அளவைகளால் அறிய முடியாத கருத்துக்களைத் தன்னுள்ளே மறைத்து வைத்துக்கொண்டிருப்பதால் அதை 'மறை' என்பார்கள். அந்த வேதத்தில் கூறப்பட்ட கருத்துக்களின் வழி அடைவே நடப்பவர்களை 'மறையோர்கள்' என்றும், வைதிகர்கள் என்றும் அழைப்பார்கள். வேதங்கள் இறைவனது மூச்சுக் காற்றுக்களாக வெளிவந்தன என்றும் கூறுவர். திருமால் படைப்புக் காலத்தில் மறைந்திருந்த வேதத்தை அயக்ரீவனாக அல்லது குதிரை முகத்தினனாக, அல்லது அன்னப் பறவையாக இருந்து நான்முகனுக்கு ஓதுவித்தார் என்பார்கள். 'மறை முனி' என்பது பிர்மாவின் பெயர்களில் ஒன்றாகவும் அமைந்தது. வேதங்களிற் காணப்படும் மந்திரங்களை முன்பு முனிவர்கள் வெளியிட்டனரே அன்றித் தாமே எழுதவில்லை. அதனால்தான் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ரிஷி, சந்தஸ், தேவதை என்று முகவரிகளையும் தந்தனர்.

7. 'சாஸ்திரம்' என்று பெயர் வரக் காரணம்.

'சாஸநாத் சாஸ்த்ரம் உச்யதே' என்ற வழக்கிற்கிணங்க மனிதர்களுக்குத் தன்னடைவே விருப்பம் ஏற்படாத செயல்களில் இதைச் செய், இதைச் செய்யாதே என ஆணையிட்டு, ஈடுபடுத்தியும் விலக்கியும் உதவுவதால், சாஸ்த்ரம் என்று பெயர் ஏற்பட்டது. அவ்வாறு விதி விலக்குகளை உணர்த்தும் நூலை நன்கு கற்றவர்களை 'சாஸ்திரக்ஞர்' என்றும் 'சாஸ்திரிகள்' என்றும் அழைப்பது மரபு.

விடை விளக்கம்—தொடர்ச்சி.

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு, எம்பி நின்தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி; எனச்சொன்ன
வாழி நண்பினை, உன்னி மயங்குவாள் —காட்சிப்படலம், சுந்தர காண்டம்.

எனக் கம்பர் பாடிய கவின்மிகு செய்யுள், திருமங்கையாழ்வார் அருளிய மேலைத் திருப்பாடலைத் தழுவி அமைந்ததே யாகும்.

5 பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதியுரிஞ்சி வான்முகடு நோக்கிக்—கதிமிகுந்த
கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி ஓடும் மனம். —பூதத்தாழ்வார், இயற்பா.

ஓர் இளங்கொடியானது தான் தாவிப் படர்வதற்கு ஒரு கொழுகொம்பைத் தேடி அலைவது போல, என்னுடைய மனமும் கூட வேறு ஏதும் தனக்கு உண்மையான சிறந்த பற்றுக் கோடு இல்லாமையினால், திருமாலினையே தேடிக் காண விழைந்து ஓடி அலைந்து திரிகின்றது என்பது கருத்து. —ஆசிரியர்.

திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

சிறுதேர்ப் பருவம்

கந்தமல ரயனுமரி அந்தரத் தமரரும்
கற்பக நிழற்றலைவனும்
காணரிய தாணுவின் பேரருட் டிறமெல்லாம்
கண்காணு மாறுகாட்டிச்
சந்ததமும் மெய்யன்பர் முந்தைநெறி நின்றெந்தை
தண்ணருளில் மூழ்கியோங்கிச்
சைவமலி சித்தாந்த மெய்யுணர்வி லூன்றிடத்
தண்டமி ழுலங்க லீந்தாய்
வந்தனைசெய் தேத்திநின் மலரடி வழுத்தாது
மானமொன் றேமதித்த
வல்லமணர் கழுவேற வான்சைவம் ஈடேற
வைகை நதி யெதிரேறுமோர்
செந்தமிழ்ப் பதிகமருள் வித்தகச் சிவஞானி
சிறுதே ருருட்டியருளே !
தேம்பொழி லுடுத்தசீர்ப் பூம்புகலி நாயகன்
சிறுதே ருருட்டியருளே !! 1

ஐந்தொழிலி லொன்றுமில் சித்தபர மேட்டியும்
முரசனைய அருகதேவும்
அவிகாரி யாய் விழைவு வெகுளியில ராதலால்
ஆருயிர்க் கருள்புரிதலில்
பந்தமுறு மன்னுயிர்கள் இருவினைப் பற்றின்றிப்
பார்தரும் நுகர்ச்சி விட்டால்
பரமநிலை யிற்சென்று தானே தரித்திடும்
பண்புடைய என்று பகரும்
வெந்தொழில ரிருதலைப் போகமொடு பற்றுமே
விட்டனர் வீணரென்ன
வெம்புசுர நீக்குமோர் செம்பொருட் பதிகத்தில்
விண்ணப்ப மேத்தினைநீ

செந்தழலி லேடிட் டெடுத்தென்னை யாண்டவன்
சிறுதே ருருட்டியருளே !
தேம்பொழி லுடுத்தசீர்ப் பூம்புகலி நாயகன்
சிறுதே ருருட்டியருளே !! 2

பாவனைக் கெட்டாத சிற்பரனை உள்ளம்
பயின்ற றியுமாறு சுத்தப்
படரொளிய விந்துதரு மந்திரம் கிரியையால்
பாவித் தருட் சத்தியைத்
தேவரும் தொழுவரிய மூலலிங்கப் பெயர்கொள்
திருமேனி தனில் நிறுத்தும்
தெய்வநிலை யங்களில் தவறுகுறை நீங்கிடத்
திருவருள் விளக்க மோங்கப்
பூவலயம் வாழச்செய் மாசாந்தி காணுது
போதியோ எனும் வினுவால்
புண்ணிய னருள்வேட்ட மாநிலத்தீ ரஃது
போற்றுமி னெத்தெரித்தபய
தேவியரு ளாரமுத மார்ந்தசிறு மதலைநீ
சிறுதே ருருட்டியருளே !
தேம்பொழி லுடுத்தசீர்ப் பூம்புகலி நாயகன்
சிறுதே ருருட்டியருளே !! 3

நீலமார் மணிமிடறும் நாற்றோளும் முக்கண்ணும்
நீள்சடைக் காடும்மேவ
நெடியமால் விடையேறி வந்தருள் சுரந்திடும்
நியமமார் இருமைமலரின்
பாலுலா மமுதலைய மழலைதவழ் பச்சிளம்
பருவத்தி லிறைவன்வந்து
பார்பரவு முனிவரும் தேவரும் உணர்வரிய
பரஞான அமுதீந்திடக்
கோலமா மறையவர் குலவிளக் கேயிந்தக்
குவலயத் தியாவர் பெற்றார் ?
குவியுமங் கைத்தளிரின் மெய்யன்ப ரிதயமே
கோயிலாக் கொண்டு மகிழும்

சேலுலாம் பைம்புனற் பொன்னிவள நாட்டினன்
சிறுதே ருருட்டியருளே!

தேம்பொழி லுடுத்தசீர்ப் பூம்புகலி நாயகன்
சிறுதே ருருட்டியருளே!! 4

கறித்துண ரரித்திலவ மேலமிழவ கமழுமென்
காந்தளம் பூக்கள்வாரிக்

காய்சின நெடுங்கைமத வேழமொடு வெம்புலிக்
கணமெலா முருளவோடி

வெறித்துண ரசோகுவளர் வேங்கைமா நாகமிவை
வேர்சாய்த் தெழுந்து மண்டி

வீறுற்றெழூஉம் திறற் போர்ப்படையி னார்த்தெழூஉம்
வெள்ளருவி யீட்டமாகிப்

பறித்துநறை மலர்தூவி நீராட்டி வழிபடூஉம்
பத்தர்கண மென்ன நாளும்

பைம்பொன்வார் கரைதோறும் எம்பிராற் போற்றிநீள்
பணிலம்முத் தீனவாரித்

தெறித்துலவு பொன்னிசூழ் நன்னுடுதந்தவன்
சிறுதே ருருட்டியருளே!

தேம்பொழி லுடுத்தசீர்ப் பூம்புகலி நாயகன்
சிறுதே ருருட்டியருளே! 5

வேறு

அலகை யெனத்திரி நாத்திக வாதத்
தார்த்தெழு தூர்த்தனென

அம்புவி யெங்கும் வெம்பி யலைந்துழல்
ஆத னெனக் கருதாய்

கலக மனத்தெழு தீவினை வீட்டம்
கடலலை போலெதிரக்

கலதி யெனத்திரி வேனையழைத்துன்
கழலிணை தந்தாண்டாய்

இலகொளி முத்தின் சிவிகை நிழற்ற
எழுந்தருளும் சுடரே

இனிய செழுந்தவம் அறிய உணர்த்தியிவ்
வேழையனுக் கருளி

உலக முதற்குரு வாகிய ஞானன்
உருட்டுக சிறுதேரே !

உபநிட தப் பொருள் தெளிய வடித்தவன்
உருட்டுக சிறுதேரே !! 6

அளிதரு முள்ளத் தருளமு தூற்றும்
ஆனந்தக் கனியே

அழகிய திருநீற் றொளிகிளர் மார்பின்
அம்பவ ளச்சுடரே

தெளிதரு முள்ளத் திருள்கெட வீசும்
தெய்வக் கதிரொளியே

செந்தமி ழார்கவி தந்ததொர் முத்தே
செம்பவ ளக்கொடியே

களிதரு நெஞ்சக் கமலமலர்த்தும்
கருணைய வான்கதிரே

கனமுலை யமுதுசு ரந்திட வாங்கிக்
கௌரி கொடுத்தருளும்

ஒளிதரு செம்பொற் கிண்ணம் பெற்றவன்
உருட்டுக சிறுதேரே !

உபநிட தப்பொருள் தெளிய வடித்தவன்
உருட்டுக சிறுதேரே !! 7

தாமரை புரையும் காமர டிச்செந்
தளிர்சூழ் தரமேவும்

தண்டை யணிந்த சிலம்பொலி நாயேன்
தன்செவி வாங்கிடுமோ

பூமரு சிவமணி யும்திருநீறும்
புரிநூ லும்பொலியப்

பொங்கொளி தங்கிய ஐம்படை மார்பிற்
பூசுரர் வாழ்முதலே

தேமரு கமலத் தொடையணி திண்டோட்
செல்வப் போரேறே

சிதையா மோனப் பெருநிலை யருளும்
தெய்வப் பெருவாழ்வாய்

ஓமென மாமறை தோற்றிய வித்தகன்
உருட்டுக சிறுதேரே !

உபநிட தப்பொருள் தெளிய வடித்தவன்
உருட்டுக சிறுதேரே !! 8

ஞானம தங்கமழ் தும்பி முகங்கொள்
நாத னடிக்கமலம்

நையும னத்தட மீதும லர்த்திய
நம்பிய ளித்த செழும்

தேனமு தத்தமிழ் மாலைம ணங்கமழ்
திண்புய மாதவனே

தில்லையி லாடுமொ ரெல்லையி லானருள்
செம்மொழி யேமுதலா

ஞானம ணங்கம ழுத்தனி போற்றிய
சரிதம ணங்கமழும்

நாண்மலர் மெல்லடி நாயனை யேன்புன்
சொல்லும் நயந்ததுவோ

ஊன மொழித்தெனை யாளுங் குருபரன்
உருட்டுக சிறுதேரே !

உபநிட தப்பொருள் தெளியவ டித்தவன்
உருட்டுக சிறுதேரே !! 9

நாதாந் தத்துறு ஞானப் பேரொளி
நாடிவி ரைந்திடுமார்

நளின மலர்க்கண் ணீர்த்துளி சிந்திய
நாயக மாமணியே

வேதா கமநெறி வீறுபெ றப்புவி
மீமிசை வந்தவனே

விமல னருட்பே ராண்மை விளக்கிய
வித்தக மாமுனியே

தாதார் கமலத் தாளிணை நாயேன்
தனிமுடி யாக்கியவா

தாதைக் கும்குரு வாகிய மர்ந்ததொர்
சண்முக சாமியென

ஓதா மேயுணர் முத்தமிழ் வித்தகன்
உருட்டுக சிறுதேரே !

உபநிட தப்பொருள் தெளிய வடித்தவன்
உருட்டுக சிறுதேரே !! 10

தடுத்தாட் கொண்ட தன்மை

(சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர் ஔவை சு. துரைசாமி, மதுரை.)

தடுத்தாட்கொண்ட தன்மை என்ற இத்தலைப்பைக் காணும்போது, தடுத்தாட் கொள்ளப்பெற்ற தன்மையால் உயர்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாறுதான் நினைவிற்கு வரும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ற பெயர் இலக்கியங்களில், திருமுறைகளில், பெருகக் காணப்படுவதன்று; சைவ இலக்கியங்கள் அவரை நம்பி ஆரூரர் என்றே குறிக்கும். அவரும் தமது பெயரை ஆரூரன், ஊரன் என்றே குறிப்பது வழக்கம். சில திருப்பதிகங்களில் தம்மை நாவலூரன், நாவலாரூரன் என்று கூறுவர். அதற்குக் காரணம் அவரது ஊர் திருநாவலூர்.

ஆரூரர் நாவலூர்க்கு உரியராயினும், பிறந்தது தன் தாயான இசை ஞானியாரின் பிறந்தகமான கமலாபுரம்; அது திருவாரூர்க்கு அண்மையிலுள்ளதோர் ஊர். அதனால் அவர்க்கு ஆரூரன் என்ற பெயர் எய்திற்று என்பர்; வேறு சிலர், அவருடைய தந்தைக்குத் தந்தை ஆரூரன் என்ற பெயரை யுடையவர்: தடுத்தாண்ட காலத்தில் வெண்ணெய் நல்லூர் வேதியரவையில் காட்டப்பட்ட மூலவோலை நம்பி ஆரூரரின் முன்னோன் "அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன்" என்று கூறுவதே இதற்குச் சான்று என்பர். நம்பியாரூரரோ எனில் "சீராரும் திருவாரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த ஆரூரன்" என்று குறிக்கின்றார்.

இங்ஙனம், தம்மை ஆரூரன் என்றே வழங்குவாராயினும், தம் தந்தை தாயரை மறவா மாண்பினால் சடையன் என்ற தந்தை பெயரையும், இசை ஞானியான தாய் பெயரையும் இணைத்து "நண்புடைய நன் சடையன் இசை ஞானி சிறுவன் நாவலர் கோன் ஆரூரன்" என்றும், தமது முழுப் பெயரையும் உலகியல் வழக்குக்கு ஒப்பக் காட்டும் முறையில் வைத்து "சடையன் திருவாரூரன்" என்றும் உரைப்பர்.

நம்பி ஆரூரர் தம்மை ஆரூரன் என்பதில் பெரு விருப்புடையராயினும், தமக்குரிய நாவலூரின் பால் மிகுவிருப்பமுடையர். நாவலூரை யுரைக்குங்கால் "நாதனுக்கூர் நமக்கு ஊர் நரசிங்க முனையரையன், ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணி நாவலூர்" என்று கூறுவதனால் அறியலாம்.

மேலும் திருநாவலூர் "நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர்" என்பது, நரசிங்க முனையரையனது திருப்பணி கொண்ட சிறப்புடையது என்ற குறிப்பை நல்குகிறது. நரசிங்க முனையரையன், அந்நாளைப் பல்லவ வேந்தராட்சியில் திருமுனைப்பாடி நாட்டு அரசியல் தலைவன் சேக்கிழார் 'திருமுனைப்பாடி நாடாளும் காவலனார் நரசிங்க முனையரையர்" என்று பாராட்டுவர். அப்பகுதியிற் காணப்படும் கல்வெட்டுக்கள், நாவலூரை "நடுவில் மண்டலத்துத் திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூர்" என்று வரைந்து கூறுகின்றன. திருமுனைப்பாடி நாட்டில் சிவபெருமான் எழுந்தருளும் பதிகள் பல இருப்பினும் நாவலூரின்பால் பேரன்பு கொண்டு அவ்வூர்ச் சிவன் கோயிற்குத் திருப்பணி பல செய்துள்ளார் நரசிங்கமுனையரையர். அதனை நேரிற் கண்டவராதலின், நம்பி ஆரூரர் 'நரசிங்கமுனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணி நாவலூர்" என்று அறிவிக்கின்றார்.

நரசிங்கமுனையரையர், ஆதிரை நாள் தோறும் சிவனுக்கு நிறைவழிபாடும் சிவத் தொண்டர்க்கு உணவளித்தலும் செய்தார் எனச் சேக்கிழார் பெருமான் தெரிந்து மொழிகின்றார்.

அந்த முனையரையர் பெருமனையில் வளர்ந்தமையின் நம்பியாரூரர் அந் நாளைய அரசியல் அறிவிலும் சிறந்து விளங்குகிறார். அவருடைய திருப்பதிகங் களும், நாட்டுப் பிரிவுகளையும் திறை கொடா மன்னரை மறுக்கம் செய்யும் பல்லவர் பண்பையும் காட்டக் காண்கி றோம். தென்னாட்டுச் சிவன் கோயில் களில் வழிபாடு' முதலியன செய்தற்கு ஆதிசைவர் சிலர் வேறு நாடுகளிலிருந்து கொணரப்பட்டனர் எனத் தென்னாட்டு வரலாறு கூறுகிறது. அவ்வகையில் நம்பி ஆரூரர் குடி முதல்வர் திருவாரூர்ப் பகுதி யிலியிருந்து குடியேற்றப்பட்டு மன்னர் ஆதரவில் மகிழ்ந்து வாழ்ந்தவராகலாம். அத்தொடர்புதான் நரசிங்கமுனையரின் நன்மனையில் அரசர் திருவுடன் ஆரூரர் வளர்தற்கு ஏதுவாயிற்று என்று கருத முடிகிறது. இந் நிலையில் வேதியர்க்குரிய நெறிமுறை வழுவியதில்லை என்றற்கு 'மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க'' ஆரூரர் விளங்கினார் எனச் சேக்கிழார் செப்புகின்றார்.

வைதிகத்திரு என்பது யாது? அத்திரு வுடைய நம்பியாரூரது திருமணம் சிவ வேதியர் ஒருவரால் சிதைப்புண்டது ஏன்? என்ற கேள்விகள் எழுவது இயல்பு. வைதிகம் என்பது வேத நெறிப்பட்ட கொள்கைகளையும் ஒழுக்கத்தையும் குறிக் கும் சொல். வேதமோதுவதும் அந்நெறி யொழுகுவதும் மேற்கொண்டிருந்த அந் தணர் வேதியர் எனப்பட்டனர்; வேதத்தை மறையென்னும் வழக்குப் பற்றி அவர் மறையவர் என்றும் கூறப் படுவதுண்டு.

இவ்வேதியர் இனம் எவர்க்கும் அடிமை யாதல் இல்லையென்ற கருத்து அந்நாளில் நிலவிற்று. நாடாளும் அரசர்க்கும் அவர் அடிமையல்லர். அரசர்களும் அவர்களைத் தாழ்ந்தவராக எண்ணுவது கிடையாது. நாட்டு மக்களின் இனமுறை கூறு மிடத்தும், வேதியரை முன்னே நிறுத்தி அரசர் முதலியோரைப் பின்னேவைத்து வேதியர், அரசர் வணிகர், வேளாளர் என்றே முறை செய்துள்ளனர். இம் முறை வைப்பை மேற்கொண்டு வணி கரை ''மன்னர் பின்னோர்'' என்று வழங் கினர். இந் நிலை வரலாற்றுக் காலந் தொட்டே வழங்கி வந்துள்ளது. இன்று வழக்கில் உள்ள இந்துலா என்ற சட்ட நூலிலும் இக்கருத்து நிலவுவதைச் சட்டம் பயிலும் மாணவரும் நன்கு அறிவர்.

இக் கொள்கை நாடு முழுதும் பரவி ஒவ்வொருவர் உணர்விலும் தோய்ந்து அவர் நரம்புக்கால் தோறும் ஊடுருவிக் குருதியிற் கலந்து பரவிய செவ்வியில் மக்களினத்தை ஒருமைப்படுத்தும் சமயத் துறையில் படர்ந்தது. ' எவ்வுயிரும் ஈசன் சந்நிதியாகும்'' என்பது சமயக் கொள்கையாதலின் சமயத்தில் பரவுவது இன்றியமையாமையும் ஆயிற்று. ஆக வே இறைவனாகிய பிரமப் பொருளும் தம்மோடு ஒப்பதேயன்றி உயர்ந்ததன்று; பிரமம் வேறு, தாம் வேறு அல்ல; தாமே பிரமம் என்று கொண்டு அதற்கு ஏற்பப் பழம் பெரு நூல்கட்குப் பொருளும் உரைத்து மக்களிடையே அக்கருத்தைப் பரப்பும் முயற்சி தோன்றி வேதிய ருள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆதிசைவருட் சிலர் அக் கொள்கைக்கு இரையாயினர்.

குணக்குறையும் குற்றமும் பொருந்திய மக்களுயிரையும், அத்தகைய குறையும் குற்றமும் இல்லாத பிரமப் பொருளையும் ஒன்றென்று உரைத்தல் உண்மையறிவுக் குப் பொருந்தாமை அறிஞர் சிலர்க்குத் தோன்றிற்று. தாமே பிரமம் என்று எண்ணுவோருள், ஆதி சைவ வேதியர்கள் உள்ளாதல் கூடாது என அவர்கள் எண் ணித் தவம் கிடந்தனர். எவ்வுயிரும் ஈசற்கு அடிமை என்று மெய்யுணர்வு விளக்குமுற வேண்டிய நல்ல காலமும் எய்திற்று.

சீர்காழியில் சம்பந்தப் பிள்ளையார் தோன்றிச் சிவனருளால் ஞான சம்பந்தராயினர் என்பது நாடறிந்த செய்தி; அதனை "போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத் தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்" என அவர் தாமே பாடிக் காட்டுகின்றார். 'போதையார் பொற் கிண்ணத்து அடிசில்" என்பதன் பொருள் கண்ட சேக்கிழார் பெருமான்,

"எண்ணரிய சிவஞானத்துஇன்னமுதம்
குழைத்தருளி
உண்ணடிசில் எனவூட்ட உமையம்மை
எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற் பொற்
கிண்ணம் அளித்து
அண்ணலை அங்கு அழுகைதீர்த்து
அங்கணனர் அருள் புரிந்தார்"

என்ற பாட்டால் விளக்குகின்றார். போதையார் பொற்கிண்ணம் என்றது, போது ஐ ஆர் எனப் பிரிந்து, போது தாமரைப்பூ எனவும் ஐகாரம் அசை நிலை எனவும், ஆர் உவமவுருபாகவும் நின்று தாமரைப்பூவடிவில் செய்யப்பட்ட பொற்கிண்ணம் எனப் பொருள்படுமாயினும், போதையார் அடிசில் என இயைத்து போதம் என்பது, அம்முக்கெட்டு ஐகாரம் பெற்று ஞானம் எனப் பொருள் படக் கொண்டு, ஞானம் நிறைந்த அடிசில் என்று கொண்டு, எண்ணரிய சிவ ஞானத்து இன்னமுதம் எனவுரைக்கின்றார். இன்னமுதமாகலின் மருது உண்டற்குரியது என்றற்கு உண் அடிசில் என்று சொல்லி உண்பித்தமை தோன்ற 'என ஊட்ட' என்றும், பொற்கிண்ணம் என்றதற்கு வேறு பொருள் வேண்டாமையால் பொற்கிண்ணம் எனவும் கூறுகின்றார். சம்பந்தப் பிள்ளையார் உண்டது ஞானமே என்பதை நம்பி ஆரூரர் திருநனிபள்ளிப் பதிகத்தில் 'ஊனமில் காழி தன்னுள் உயர் ஞான சம்பந்தர்க்கன்று ஞானம் அருள் புரிந்தான் நண்ணுமூர் நனிபள்ளியதே" என்று நவில்கின்றார். அவரது அருளுரையையே முதற் பொருளாகக் கொண்டமையின், சேக்கிழார் பெருமான் உரைத்தது உண்மையுரையேயாம்.

ஞானமுண்டு ஞானசம்பந்தரான பிள்ளையார் பெற்ற ஞானத்தை உரைக்கும் சேக்கிழார், அது "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என்று தெரிவித்து, அதன் கருத்து சிவமே பரமாய பொருள்; ஏனை உயிர்ப் பொருள் யாவும் அதற்கு அடிமை! உயிரில் பொருள் அனைத்தும் சிவத்தின் உடைமை என்பது.

பிள்ளையார் தோன்றிய காலத்தில், எவ்வுயிரும் ஈசற்கு என்ற நல்லுணர்வை நாட்டில் பரப்ப வேண்டிய செவ்வி இனிது அமைந்திருந்தது. தாம் பிரமம் என்ற கொள்கையை ஏலாதவர் சிலர் ஏனைச் சமணம் முதலிய சமயக் கருத்துக்களை மேற்கொள்ளலாயினர். இந்நிலையை நன்கு காணும் ஞான நாட்டம் பெற்ற பிள்ளையார், சிவ நெறிக் கருத்துக்களை இனிய இசைத் தமிழால் மக்கட்கு அறிவுறுத்தற்கு எண்ணி எழுந்தார். இதனைக் குறிப்பாய்க் காட்டும் சேக்கிழார் அடிகள்,

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும்
உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்
எனும் அறிவும்
இப்படியால், இதுவன்றித் தம் இசைவு
கொண்டியலும்
துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்
தெழுந்தார்"

என உரைக்கின்றார்.

உடல்கருவி உலகு முதலிய பொருள்களைப் படைக்கும் பரம் பொருள் ஈசன் என்னும், இஃது உண்மையறிவால் உணரப்படுவதே யன்றிப் பிறவாற்றல் அறியப்படாது என்றற்கு "ஈசனே என்னும் உணர்வும்" என்றும், அப்பொருள்களை ஆண்டு பயன் நுகருமாற்றால் உயிர்கள் அச்சிவனுக்கு அடிமையாவதன்றி ஒத்தலோ உயர்தலோ இல்லை என்பது விளங்க "அப்பொருள்தான் ஆளுடையார் அடி

யார்கள்" என்றும், உதவி பெற்றவர் அதனைச் செய்தார்க்கு நன்றியறிவால் அடிமைப்படும் செயலால் எளிதில் அறியப்படுவதால், 'அப்பொருள் தான் ஆளுடையார் அடியார்கள் எனும் அறிவும்' என்றும், இக்கருத்துக்கள் எவரும் சிறிது எண்ணியவழி இனிது விளங்க நிற்கின்றன என்பது தோன்ற "இப்படியால்" என்றும் சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

இவ்வுண்மையைக் காணும் திறம் இன்றிப் பரம் பொருளாகிய பிரமமும் தாமும் ஒன்றே என்னும் கொள்கை துப்புரவு உடையார்க்கு ஒத்ததன்று; அறிவறிந்து இன்புறுவதாகிய துப்புரவு இல்லாதார் கொள்ளும் துணிவு என்றும், அதனை மறுத்துச் சிவனே முதல்; ஏனையாவும் அவற்கு அடிமை என்ற உண்மை விளக்க முற வேண்டும் எனத் திருஞான சம்பந்தர் திருவுள்ளம் கொண்டு எழுந்தார் என்பாராய்ச் சேக்கிழார், "தம் இசைவு கொண்டியலும் துப்புரவில்லார் துணிவுதுகளாகச் சூழ்ந்து எழுந்தார்" என்று விளம்புகின்றார்.

நம்பியாரூரர் திருமணச்செவ்வி எய்திய காலத்தில் சிவவேதியரிடத்தும் தாம் பிரமம் என்னும் கொள்கை பரவியிருந்தது. இப் பாசவுணர்வும், இதன் வழித் தோன்றும் பசுபோதமும் உண்மைச் சிவநெறிக்கு ஆகாதனவாகலின் அதற்கு இரையாக வீழ்த்தும் திருமணத்தைத் தடுத்து நம்பியாரூரரை மீட்பது திருவருளின் குறிப்பாதலை அறிகின்றோம்.

முன்பு அவர் ஆலால சுந்தரராய்க் கயிலையில் வாழ்ந்தபோது, மக்களிடை முன் வைத்துப் பேசப்பட்ட மறையவர் பால் தாம்பிரமம் என்னும் மையலறிவு சிறந்திருந்தமையை அறிந்திருந்தாராதலால், மண்ணிற்பிறக்க வேண்டிய ஏதுநிகழ்ச்சி எய்திய போது, "மையல்மானுடமாய் மயங்கும் வழி. ஐயனே தடுத்து ஆண்டருள்" என வேண்டினர். அவர் கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதலண்ணல் வேதியர் உருவிற் போந்து தடுத்தாளும் அருட் செயலைப் புரிவாராயினர்.

திருமணப் பேரவையில் கூடியிருந்த அந்தணரிடையே தாந்தாம் பிரமமேயன்றித் தம்மில் தலைவர் அடிமை என்ற வேறுபாடில்லை என்ற கருத்தே ஒவ்வொருவர் உணர்விலும் ஓங்கியிருந்தது. அத்தருக்கினை உடைத்தெறிவது திருவருட்கருத்தாதலின், வயிரத்தை வயிரவூசி கொண்டு அறுப்பது போல அந்தப் பிரமஞானியான வேதியர் உருவில் சிவபரம் பொருள் எழுந்தருளினார். அவரைக் கண்டோரும், "மெய்த்த நெறி வைதிகம் விளைத்த முதலேயோ, இத்தகைய வேடம் என ஐயுற" வெய்தினர் என்று கூறுகிறார் சேக்கிழார்.

இங்ஙனம் நம்பியாரூரர் தடுத்தாட்கொள்ளப் பட்டதற்குக் காரணம் கண்டநாம், இனி அவர் எவ்வாறு தடுத்து ஆட்கொள்ளப் பட்டார் என்பதைக் காணலாம்.

திருமணப் பேரவையுட்புக்க சிவவேதியர் மணமகனை நோக்கி "அக்காலம் உன் தந்தை தன் தந்தை ஆள் ஓலை ஈதால்" என்று கூறலும், அவர், 'ஆசில் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் பேச இன்று உன்னைக் கேட்டோம்" என்றதனோடு நில்லாமல், பிரமஞானக் கொள்கை தடித்திருந்தமை புலப்பட "பித்தனோ மறையோன்" என்று இகழ்கின்றார். பின்பு, சிவவேதியர் தமது கூற்றை வலியுறுத்தற்குக் காட்டிய ஆள் ஓலையை வாங்கி "ஆளாய் அந்தணர் செய்தல் என்ன முறை? என்று வினவிக் கொண்டே அதனைக் கிழித் தெறிகின்றார். ஏனை அந்தணர்களும் உண்மையுணரும் திறமின்றி வியப்புற்று, "இந்தப் பெருமுறையுலகில் இல்லா நெறிகொண்டு பிணங்குகின்ற திருமறை முனிவரே நீர் எங்குள்ளீர்? எனக் கேட்கின்றனர். இதனால், அங்கே கூடியிருந்த வைதிக வேதியர் அனைவரும், தாம்பிரமம் என்னும் உணர்வால் தருக்கியிருந்தமை உலகில் இல்லா நெறி என்பதனால் புலப்படுவது காணலாம். அவர்கட்கு விடைகூறலுற்ற சிவவேதியர், "இங்குளேன்; இருப்பும் சேயதன்று; இந்த வெண்ணெய் நல்லூர்" என்று மொழிகின்றார்.

—தொடரும்

10 JAN 1966
MADRAS

திருக்குற்றாலத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீ இலஞ்சிக் குமாரர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழாக் காட்சி (14—7—19.5)





திரு அய்யா முருகப்பா பிரதர்ஸ் பதிப்பித்த "இந்து அற நிலையச் சட்டங்களின் தொகுப்பு நூல்" வெளியீட்டு விழா, சென்னை உட்லண்ட்சில் 9-7-65 அன்று நிகழ்ந்தபோது, தமிழக முதலமைச்சர் திருமிகு எம். பக்தவத்சலம், பி.எ., பி.எல்., அவர்கள், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திருமிகு சந்திரா ரெட்டியார் அவர்கள் தலைமையில், மேற்படி நூலை வெளியிடுதல்.

10 JAN 1966 MADRAS

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34, Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.